
கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை
16-3-1975
50 காசு



மனங்கவரும் யாவற்றையும் என்றும் மன மகிழ படம் பிடித்து வைப்பீர் !




ஆக்ஃபா ஐஸோலி குறைவான ஒளியிலும் நிறைவான போட்டோக்களுக்கு.

விலை
Rs.182/50
(எக்ஸைஸ் தீர்வை உள்ளிட்டது. இதர வரிகள் தனி).

ஆக்பா ஐஸோலி 1 அமெச்சூர் புகைப்பட கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகளை அளித்திடும் காமெராவாக இது விளங்க 6 காரணங்களாவன:

1. மூன்று ஷட்டர் வேகப் பொருத்தங்களுடன் விரைவாக இயக்குவது இலகு.
2. நுட்பத் தெளிவுடன் சோபிக்கும் படங்களுக்கான அக்ரோமாட் f8 லென்ஸ்.
3. பாதகமான சூழ்நிலைகளிலே எடுக்கப்படும் படங்களின் சரியான எக்ஸ்போஷருக்கு உறுதி தரும் 2 லென்ஸ் ஸ்டாப்கள்.
4. விசேஷமாகவே பொதியமைப்பை உடைய பிலிம் சுருட்டுகளும் இரட்டை எக்ஸ்போஷரைத் தடுத்திடுகிறது.
5. 120 சைஸ் ரோல்பிலிமிலே 16 (4x4 செமீ) படங்களைத் தருகிறது (6x6 செமீ சைஸ் உடைய படத்தைவிட 4 அதிகம்).



திரையிடுவதற்கெனப் பளிச்சென்ற ஆக்பா கலர் டிரான்ஸ்பேரென்ஸிகளையும் எடுக்கிறது ஆக்பா ஐஸோலி 1. தெளிவுத் தெளிவுள்ள பிரிண்டுகளுக்கும், எல்லாவற்றுக்கும் எப்போதுமே குறிப்பிட்டுக் கோருவீர் ஆக்பா-கேவார்ட் போட்டோத் தாள்களே.

தயாரிப்பாளர்கள்:
நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்., பரோடா.

Agfa ISOLY-I AGI

ஏகபோக விநியோகஸ்தர்கள்:
ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்.,
மார்ச்சண்ட் சேம்பர்ஸ், 41, நியூ மெரின்லைன்ஸ், பம்பாய்-400 020.
கிளை அலுவலகம்: பம்பாய் - புது டெல்லி, கல்கத்தா, சென்னை
® புகைப்பட சாதனங்களின் தயாரிப்பாளர்களான ஆக்பா-கேவார்ட், ஆண்ட்வெர்ப்/லீவர்குஸன் அவர்களின் ரெஜிஸ்டர்டு டிரேட் மார்க்.

SIMOES/AG/33TAM

கோகுலம்

மலர் 3 ☐ இதழ் 24

மார்ச் 16, 1975

ஆனந்த, பங்குனி 2

சந்தா விவரம்:


உள்நாடு:

ஒரு வருடம் ரூ. 13-00

ஆறு மாதம் ரூ. 6-50

வெளிநாடுகள்:

ஆண்டுச் சந்தா ரூ. 27-50



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மை யென்று
தானறிதல் வேண்டும்

— பாரதியார்

பறக்கும் கால்கள்!

நிற்குமிடத்தில் நிற்காமல் சதா ஓடியாடி உழைக்கும் ஒருவனைப் பார்த்து "அவன் காலில் இறக்கை கட்டிக் கொண்டல்லவா பறக்கிறான்?" என்று சொல்லுவார்கள். கிரேக்க இதிகாசங்களில் காலில் இறக்கையோடு கூடிய ஒரு கடவுளேகூட உண்டு. வருங்காலத்தில் பறக்கும் கால்களை விஞ்ஞானிகள் உருவாக்கினாலும் உருவாக்கலாம். நடக்கக் கூடாதது என்று சொல்வதற்கில்லை. ஆனால் இன்றைக்கு நடக்கும் கால்களுக்கு வேகம் கொடுத்துச் செல்லும் ஒரு சாதனத்தை உருவாக்கி இருக்கிறார்கள். நம் பாரதத்தில் பம்பாய், டெல்லி, கல்கத்தா, சென்னை போன்ற பெரிய நகரங்களில்தான் ஒரே சமயத்தில் ஏராளமான கார்கள் சாலைகளை அடைத்துக் கொண்டு பிரயாணிகள் நகரவே முடியாத ஒரு நிலையைச் சிலபோது மட்டுமே ஏற்படுத்துகின்றன. ஆனால் மேலை நாடுகளில் இது சர்வ சாதாரணம். போக்குவரத்து நெரிசல் ஏற்படும்போது கார்கள் அங்குலம் அங்குலமாகத்தான் நகரும். அத்தகைய வேளைகளில் "என் கால்களுக்கு மட்டும் சக்கரம் இருக்குமானால் நான் இந்த இடைவெளிகளின் வழியாகச் சறுக்கிச் சென்றுவிட முடியுமல்லவா?" என்று நினைக்கத் தோன்றும். அப்படி நினைத்த ஒருவர் உருவாக்கியதுதான் அருகேயுள்ள இந்த இயந்திர சாதனம். கால்களுக்குச் சக்கரம் இணைத்துக் கொண்டு போகிறார் பாருங்கள் இவர்; இவர் பெயர் டாமி ஹான்காக்ஸ். *(Mr. Tommy Hancocks)* பீகான்ஸ்பீல்டைச் சேர்ந்தவர். ரோலர் ஸ்கேட்ஸ் என்று கேள்விப்பட்டிருப்பீர்களே. சக்கரம் இணைத்த காலணிகளின் மீதாகச் சறுக்கியபடி வேகமாகப் போகக் கூடிய சாதனம்தான் ரோலர் ஸ்கேட்ஸ். இந்த ரோலர் ஸ்கேட்ஸுடன் மோட்டாரை இணைத்திருக்கிறார் ஹான்காக்ஸ். தோட்டத்துப் புல் வெட்டும் (மோவர்) யந்திரத்தின் பழைய என்ஜின் இதற்குப் பயன்பட்டது. இது வீதியில் மணிக்கு 40 மைல் வேகத்தில் செல்லக் கூடியது. ஒரு காலன் பெட்ரோலுக்கு 145 மைல்கள் வரை போகலாம். இந்த வாகனத்தின் த்ராட்டில், க்ளட்ச் ஆகியவைகளை இயக்க முழங்கால்களை மடக்கினாலே போதும். கைகளுக்கு வேலை இல்லை. நெரிசல் மிக்க சாலைகளில் மோட்டாரை விட வேகமாக இதில் செல்ல முடியும். நடந்து போகும்போது ஏற்படும் களைப்பு ஆயாசம் இவைகளிலிருந்தும் மனிதனுக்கு விடுதலை. அதுசரி, இம்மாதிரி சாதனம் நம் நாட்டுக்கு எப்போது வரும்? நிச்சயமாக நமது சாலைகளில் இருக்கும் குண்டும் குழியும் மறைந்த பிறகுதான்!



அன்று வழக்கத்தைவிட முன்னதாகவே திண்ணப்பர் வாய் நீர், தலையில் முடித்த பூ, கல்லையில் மாமிசம் இவற்றோடு வந்து சேர்ந்தார்.

குடுமித் தேவரைக் கண்டாரோ, இல்லையோ, ''ஹா'' என்று அலறி, அப்படியே தடாலென்று விழுந்து விட்டார்.

நீரும், ஊனும், பூவும் நாற்புறமும் சிதறின.

அவர் கண்ட காட்சி என்ன? மிகவும் கோரமான காட்சிதான். லிங்கத்தின் வலக்கண் இருக்க வேண்டிய இடத்திலிருந்து ரத்தம் வந்து கொண்டிருந்தது.

மூர்ச்சை தெளிந்து எழுந்த திண்ணப்பர் லிங்கத்தைக் கூசிக் கூசிப் பார்த்தார். இன்னமும் ரத்தம்' வழிந்து கொண்டேயிருந்தது.

விக்கி விக்கி அழுதார் திண்ணர் - திக்கித் திக்கிப் பேசினார்.

''சாமீ! உனக்கு யார் இப்படித் தீங்கு செய்தார்கள்? அவர்களை நான் எங்கே தேடிச் சென்று கொல்வேன்? கொன்றாலும் உன் கண்ணிலிருந்து வடியும்

கடவுளுக்கே

ரத்தம் நிற்குமா? இல்லை... சரி, இதோ ஒரு வழி காண்பேன். பச்சிலை வைத்தியம் நான் அறிவேன். இம்மலை அடிவாரத்திலிருந்து மூலிகைகள் கொண்டு வந்து உன் கண்ணில் பிழிந்து புண்ணை நீக்குவேன்.''

மூலிகை கொணரப் புறப்பட்டார், திண்ணர்.

ஈசன் கண்ணிலிருந்து குருதி சொரிவது கண்டு குருக்கள் குறுகுறுத்தபோதிலும், முன்னிரவு இறைவன் சொன்னதால் 'இது ஏதோ விளையாடல்' என்று சமாதானப்படுத்திக் கொண்டு காத்திருந்தார்.

பச்சிலைகளுடன் வந்தார் திண்ணர். அவற்றை லிங்கத்தின் கண்ணுக்குரிய இடத்தில் பிழிந்தார்.

ஆ! ரத்தம் நிற்பதற்குப் பதிலாக முன்னிலும் அதிகமாக அஃதோ கொட்டுகிறது! திண்ணரின் இதயத்தில் அதைவிட அதிகம் குருதி கொட்டியது.

'வேறு மருந்து தேடலாமா?' என யோசித்தார். மருத்துவ சூத்திரம் ஒவ்வொன்றாக நினைவூட்டிக் கொண்டார். முடிவிலே ''ஊனுக்கு ஊனிடல் வேண்டும்'' என்ற வாசகம் நினைவுக்கு வந்தது.





கண் தந்தார்

ரா. கணபதி

"கண்டேன் மருந்து" என்று மகிழ்ந்தார் திண்ணனார்.

அதாவது, வெட்டி எறிந்தாலும், உடனே உயிருக்கு ஆபத்து வந்துவிடாத ஓர் உறுப்புக்கு ஊறு வந்து, எந்த மருந்தாலும் அதைக் குணப்படுத்த முடியவில்லை என்று வைத்துக் கொள். அப்போது அந்த உறுப்பையே வெட்டி எறிந்து இன்னொருவரின் அதே உறுப்பை அவ்விடத்தில் வைத்துப் பொருத்தினால் அது அங்கே ஒட்டிக் கொண்டு சீருடன் வளரும். இதுவே ஊனுக்கு ஊனிடல்.

"குடுமித் தேவா! என் கண்ணே! மெய்யாகவே என் கண்ணை நீ ஏற்றுக் கொள். ஊனுக்கு ஊனாக, உன் கண்ணின் இடத்தில் என் கண்ணை அப்புவேன்" என்றார்.

துளிக்கூடத் தயங்கவில்லை திண்ணனார். நம் வீட்டுப் புல்லைப் பிடுங்கக்கூட நாம் தயங்குவோம். திண்ணப்பரோ, 'என் அப்பனும் குழந்தையுமான குடுமித் தேவனுக்கு என்னிடமே மருந்து இருக்கிறதே' என்று மகிழ்ந்து, அம்பைக் கொண்டு தமது வலக் கண்ணையே அநாயாசமாகத் தோண்டி எடுத்தார்.

கண்ணில் சிறு தூசி விழுந்தாலே நமக்குத் தாளவில்லை. வள்ளிசாக ஒரு கண் முழுவதையும் குடைந்து எடுத்த திண்ணப்பருக்கோ நோவே தெரியவில்லை. ஐயனின் நோய் தீர்ப்பது ஒன்றே நோக்கமாக அக்கண்ணை லிங்கத்தில் குருதி வழியும் இடத்தில் பதித்தார். என்ன விந்தை! கல் லிங்கமே மெழுகானாற் போல், இவர் பதித்த கண், லிங்கத்தில் பாங்காகப் பதிந்தது. கொதி மணலில் இட்ட துளி போல, லிங்கத்தில் சொரிந்த குருதியும் சுவடின்றிச் சுவறிவிட்டது

திண்ணனார் தமது திண்ணிய தோள்களைத் தட்டிக் கொண்டு, எழும்பிக் குதித்துக் களிக் கூத்தாடினார். அவரது ஒரு கண்ணிலிருந்து குருதியும், மற்றதிலிருந்து ஆனந்த பாஷ்பமும் வழிந்தன

மகிழ்வுடன் லிங்கத்தை நோக்கிய அவர், "ஆ, கெட்டேன்" எனக் கூவினார், கேவினார்.

இதென்ன சோதனை! இப்போது லிங்கத்தின் இடக் கண் உள்ள இடத்திலிருந்து குருதித் தாரை குபுகுபு வென வடிகிறது!

'இதற்கேன் துடிக்க வேண்டும்? மெய்யாகவே 'கண் கண்ட மருந்தைத் தான் சற்று முன் பார்த்துவிட்டேனே? இன்னும் என்ன யோசனை? என் இடக் கண்ணையும் எடுத்து அப்பனுக்கு அப்பிவிட வேண்டியதுதானே?' என்று தெளிவுற்ருர் திண்ணர்.

''என் அன்புக்கு உதவும் அம்பே!'' என்று சொல்லி அம்பை முத்தமிட்டு, பெயர்ப்பதற்காக இடக் கண் அருகே கொண்டு போனுர்.

சட்டென நினைவு வந்தது. 'இரு கண்ணும் போய்விட்டால் லிங்கத்தின் இடக் கண் எங்கே இருக்கிறது என்பதே தெரியாதே. எனவே, அந்த இடத்துக்கு அடையாளம் வைத்துக் கொள்வேன்' என்று சொல்லிக் கொண்டார். லிங்கத்தின் இடக் கண்ணருகே தமது செருப்புக் காலை அடையாளமாக அழுந்த வைத்தார்.

அதன்பின் வலக் கண்ணைப் பறிக்க அம்பைக் கொண்டு போனுர்.

தாம் செய்த சோதனையை ஸ்வாமியாலேயே அதற்கு மேல் தாங்க முடியவில்லை. ''தரித்திலர் தேவ தேவர்'' என்று சேக்கிழார் கூறுவார். எத்தனை சோதனை செய்தாலும் திண்ணர் தாங்குவார்—தரிப்பார். ஆனுல் இதற்கு மேல் சோதிக்க சிவபெருமானுக்கே தரிக்கவில்லையாம்.

அவ்வளவுதான்! லிங்கத்தினின்று அமுத மயமான குரல் வெளி வந்தது, பனதப்புடனே. ''நில்லு கண்ணப்ப, நில்லு கண்ணப்ப! என் அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப!'' என்று வேகத்துடன் மொழிந்தார் பரமேசன். ''அன்பே வடிவான என் குழந்தாய், நிறுத்து இச்செயலை. குழந்தை மட்டும் அல்ல. என் அப்பனும் நீ. கண்ணையப்பிய நீ கண்ணப்பராவுய்'' என்ருர் பரமேசன் பரம சந்தோஷத்தோடு.

பரம சிவத்தின் அமுத மயமான திருக் கரம் வெளி வந்து, கண்ணைப் பெயர்க்கப் போன திண்ணப்பரின் கையைப் பிடித்துத் தடுத்தது.

தமது அருள் வேகத்தைவிட, திண்ணப்பரின் அன்பு வேகம் பெரிது என்று ஸ்வாமிக்குத் தெரியும். எனவே, தம் கை நீண்டு அவரைத் தீண்டுமுன் அவர் கண்ணைப் பிடுங்கியிருப்பாரோ என்பதாலே 'நில்லு கண்ணப்ப' என்று கத்திவிட்டார். இப்போது யாரும் பெருத பேருக வேடனின் கைப் பிடித்தார் வேதம் காணு ஈசன்.

இறைவனுக்குக் காட்டுப்பூ சொரிந்த திண்ணப்பர் மீது—கண்ணப்பர் மீது — தேவரும் மூவரும் மலர் மாரி சொரிந்து, ''உன்னிலும் பக்தன் உலகுண்டான நாளாக இருந்ததில்லை, இருக்கப் போவதும் இல்லை'' என்று வாழ்த்தினர்.

சிவகோசரியர் சிவானந்தத்தில் முழுகிவிட்டார்.

பரமன் கரத்தில் பிடியுண்ட கையோடு அவனிடம் அன்பிலே கரைந்து, மோக்ஷத்துக்கும் மேலான ஆனந்த வெள்ளத்தில் திளைத்துவிட்டார் கண்ணப்பர்.

கண்ணப்பரின் கையை அப்படியே பிடித்து வளைத்திழுத்து அவரைத் தமக்கு வலப் பக்கத்தில் வைத்துக் கொண்டார் காளத்தி நாதர். ''என்றென்றும் நீ எனக்கு வலப் பக்கத்திலேயே விளங்குவாய்'' என்று ஆசி வழங்கினுர்.

குழந்தைகளே! கண்ணப்பரின் பெருமையே பெருமை! நாம் சொல்கிற நாகரிகக் கலை ஆசாரங்கள் எதுவுமே அவர் அறியார். ஆனுல் இக்கலைகளுக்கு மேற்பட்ட அன்புக் கலையைப் பூரணமாக அறிவார். அதனுல்தான் சுந்தர மூர்த்தி நாயனுர் ''கலை மலிந்த சீர் நம்பி கண்ணப்பருக்கு அடியேன்'' என்று தம்மைச் சொல்லிக் கொண்டார்.

அன்புச் சக்தியில் இறைவனுடனேயே அவர் எந்நாளும் கோயில்கொள்ளும் பெரும் பாக்கியம் பெற்றுவிட்டார். 'பக்தி எதைத்தான் செய்யாது'. 'காட்டு வேடன் பக்தர்களின் முடியணியாகிவிட்டானே' என்று இந்தப் பாக்கியத்தை ஆதி சங்கரரே வியக்கிருர்!

ஸ்ரீ காளஹஸ்தி என்று சென்னைக்கு எண்பது மைல்களில் உள்ள க்ஷேத்திரத்துக்குப் போய்ப் பாருங்கள். அங்கே, லிங்கத்தின் மேல் போட்டிருக்கும் நவக்கிரகசட்டத்தை அபிஷேக சமயத்தில் அகற்றும்போது, லிங்கத் திருமேனியை விளக்கு கொண்டு விளக்கிக் காட்டுமாறு அர்ச்சகரைக் கேட்டுக் கொள்ளுங்கள். அவர் காட்டுவார். லிங்கத்திலேயே அதைப் பூசித்த பாம்பின் படம், யானையின் தந்தம், சிலந்தி இவை காணப்படும். இவற்ரேடு ஒரு கண்ணும் அதில் பதிந்திருக்கும். ஆம், அது நம் கண்ணப்பரின் கண்தான்!

அது மட்டுமல்ல, லிங்கத்தின் பக்கத்தில், காற்றில் அப்போதும் ஆடிக் கொண்டிருக்கும் விசித்திர தீபத்துக்கு அருகே, கண்ணப்பரின் விக்கிரகமும் அழகு சொட்ட அருள் சொட்ட நின்று கொண்டிருக்கும்!


அடையாறு கலாக்ஷேத்திரத்தைச் சேர்ந்த கலைஞர்கள் திண்ணப்பரின் கதையைக் கண்ணப்பர் குறவஞ்சி என்ற நாட்டிய நாடகமாக அற்புதமான முறையில் மேடையில் நடித்துக் காட்டுகின்றனர். அதிலிருந்து சில காட்சிகள் :


1. திண்ணப்பர் தன் தோழர்களுடன் வேட்டையாடுதல்.
2. திண்ணப்பர் தந்தை நாகன் தாய் தத்தையாருடன்.
3. குடுமித்தேவராகிய சிவபிரானிடம் மனத்தைப் பறிகொடுத்து வீடு திரும்ப மறுக்கும் திண்ணப்பரிடம் பெற்றோர் தம்மோடு வரும்படி கெஞ்சுதல்.
4. திண்ணப்பர் கண்ணப்பரான காட்சி.












பலப்பரீட்சை

காலை நேரம், கதிரவன் தன் கிரணங்களுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகக் கதகதப்பை ஊட்டிக் கொண்டிருந்தான். குரங்குகள் மரத்துக்கு மரம் தாவியபடி கும்மாளமிட்டுக் கொண்டிருந்தன. பறவைகள் கிளைக்குக் கிளை தாவுவதும், 'கிர்ரீக், கிர்ரீக்', 'குக்கூ.... குக்கூ....' என்று பலவிதமான குரல்களில் பாடுவதுமாக இருந்தன. அது ஓர் இனிமையான காலை நேரம். ஆனால் அப்பா சிட்டுக் குருவிக்கோ அசாத்தியக் கோபம்!




அப்பா சிட்டுக் குருவி அவசரமாகப் பறந்து வந்து கொய்யா மரக் கிளையில் உட்கார்ந்தது. படபடவென்று பலமாகவும் வேகமாகவும் அம்மா சிட்டுக் குருவியிடம் பேசிற்று. அதற்கு ஆத்திரமான ஆத்திரம், கோபமான கோபம்! அம்மாக் குருவி தன் கூட்டில் உள்ள முட்டைகளுக்கு மேலே அடக்கமாக உட்கார்ந்து கொண்டிருந்தது, அடை காக்க.

உஷத் காலத்திலேயே எழுந்து விடும் அப்பாக் குருவி. காலையில் எழுந்ததும் நதிக்குப் போய் ஸ்நானம் செய்யா விட்டால் அதற்கு எந்த வேலையுமே ஓடாது. நதிப் படுகையில் ஆழமில்லாத ஓர் இடம் உண்டு. அங்கு முங்கிக் குளித்தால்தான் அதற்குக் குளித்தது போல் இருக்கும். ஆனால் அன்றைக்கு அங்கே — வழக்கமாக அப்பாக் குருவி ஸ்நானம் செய்யும் அந்த இடத்தை ஒரு முதலை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. பாதி உடல் நீருக்குள்ளும் பாதி வெளியிலுமாக நீள நெடுக அந்தப் பொல்லாத முதலை மிதந்து கொண்டிருந்தது. அப்பாக் குருவியின் ஸ்நான கட்டத்தை முழுக்க அடைத்துக் கொண்டு கட்டையாகக் கிடந்தது முதலை. அப்பாக் குருவி இந்த ஆக்கிரமிப்புக்காக முதலையை ஏசியபோது அது தன்னுடைய பெரிய வாயை அகலத் திறந்து சிரித்துவிட்டு அலட்சியமாக, ''எனக்கு இந்த இடம் அலுத்துப் போகும் வரை நான் இங்கேயேதான் இருப்பேன்'' என்றது அழுத்தமாக.


அப்பா சிட்டுக் குருவிக்கு ஆத்திரமான ஆத்திரம் அதைத் தான் அப்படி அம்மா சிட்டுக் குருவியிடம் பொரிந்து தள்ளிக் கொண்டிருந்தது. திடீரென்று மரமே குலுங்கியது, 'தம்' என்ற ஓசையுடன். கோபத்திலே கூச்சலிட்டுக் கொண்





டிருந்த அப்பாக் குருவி நிலை தடுமாறி — நல்ல வேளை கீழே விழவில்லை. அப்படியோர் அதிர்ச்சி. அம்மா சிட்டுக் குருவி கூட்டுக்குள் அடக்கமாக அமர்ந்திருந்ததோ பிழைத்ததோ! இல்லாவிட்டால் மரம் குலுங்கிய குலுங்கலில் கூட்டோடு, முட்டைகளோடு அதுவும் கீழே விழுந்திருக்கும்.

''வர வர இந்தக் காட்டில் நிம்மதியே போய் விட்டது. அதுவும் இன்று காலையிலிருந்து ரொம்ப மோசம். இந்த மரத்தை இப்படி யார் குலுக்கியது?'' என்று



வாண்டு மாமா

மூக்குச் சிவக்க, முகம் வியர்க்க ஆத்திரத்துடன் ஜிவ்வென்று மேலே பறந்து சென்று பார்த்தது. கரேலென்ற பெரிய முதுகு. குஞ்சம் கட்டியது போலச் சின்ன வால். உடல் அநேகமாக மரங்களிடையே மறைந்திருந்தது. அட, யானை அண்ணை! காலையில் காட்டில் உலாக் கிளம்பி யிருக்கிறார். அதன் உரசலில் தான் இந்த மரம் இத்தனை அலங்கோலமாக ஆடி.....

''யானையாரே நில்லும்....'' கத்தியது அப்பா சிட்டுக் குருவி, தனது கோபம் கூடிய கரகரப்பான குரலில். ''என் மனைவியையும் குழந்தைகளையும் கூட்டோடு கீழே தள்ள இருந்தீரே, இப்போது. அது தெரியுமா உமக்கு?'' என்றது.

''தெரிந்தாலும் நான் அதற்காகக் கவலைப்படப் போவதில்லை'' என்றது யானை, துதிக்கையால் ஒரு மரத்தைச் சுற்றிப் பிடுங்கியபடியே. இருந்தாலும் யானையாருக்குக் கர்வம் ஜாஸ்திதான். 'ஏதோ தெரியாமல்... மன்னிச்சுக்கோ' என்று கூறியிருக்கலாம்.

''கவலைப்படப் போவதில்லையா?'' கிரீச்சிட்டது அப்பா சிட்டுக் குருவி. காலையிலிருந்து அதற்குக் கோபம்.. ''உம்மைக் கவலைப்படும்படி செய்ய என்னால் முடியும் யானையாரே!'' என்று சவால் விட்டபடி மேலும் கீழுமாகப் பறந்தது சிட்டு.

''இன்னொரு தடவை இப்படி என் மரத்தின்மீது வந்து மோதினீரோ உம்மைக் கட்டிப் போட்டு விடுவேன் ஜாக்கிரதை!'' என்றது தன் சின்னச் சிறகுகள் படபடக்கச் சிட்டுக் குருவி.

அம்மா சிட்டுக்குருவிக்குத் தன் கணவனின் வீராவேசமான வசனத்தைக் கேட்டு வியப்பான வியப்பு. யானை அண்ணன் தன் துதிக்கையை உயர்த்திப் பிளிறியது. ''கட்டிப் போடுவாயா? ஹா...ஹா...ஹா! தாராளமாகக் கட்டிப் போடப்பனே! சிட்டுத் தம்பி, நீயல்ல, உன்னைப் போல ஆயிரம் சிட்டுக் குருவிகள் சேர்ந்தாலும் என்னைக் கட்டிப் போடமுடியாது, தெரிந்துகொள்'' என்றது.

''அதையும் பார்த்துவிடலாம்'' என்றது அப்பா சிட்டுக்குருவி ஆத்திரத்துடன். அட்டகாசமாகச் சிரித்தபடியே மரங்களை முறித்துத் துவைத்தபடி ஆடி அசைந்து காட்டினுள் சென்று மறைந்தது யானை. அம்மா சிட்டுக் குருவியுடன் கொஞ்சம் சிடுசிடுத்துவிட்டு அப்பா சிட்டுக்குருவி மறுபடி நதிக்கரைக்குப் போயிற்று. முதலை அந்த இடத்தை விட்டு நகரவில்லை. ஆனந்தமாகக் கண் மூடித் தூங்கிக் கொண்டிருந்தது. சிட்டுக் குருவி 'கீச் மூச் கீச்மூச்' என்று குரல் எழுப்பியபடி அதன் மீதாகப் பறந்தது. முதலை தன் ஒற்றைக் கண்ணைத் திறந்து குருவியைப் பார்த்துவிட்டு, ''எனக்கு இந்த இடம் ரொம்பப் பிடித்திருக்கிறது'' என்றது.

''பிடித்திருக்கும் பிடித்திருக்கும்.. இதைக் கேட்டுக்கோ. நாளைக் காலையிலும் உன்னை இங்கு பார்த்தேனானால் அப்புறம் நான் ரொம்பப் பொல்லாதவனாக இருப்பேன். உன்னைக் கட்டிப் போட்டு விடுவேன், ஜாக்கிரதை'' என்றது சிட்டு.

''உன் விருப்பம் போலச் செய்து கொள்'' என்ற முதலை தன் திறந்த ஒற்றைக் கண்ணையும் மூடிக்கொண்டு தூங்கத் தயாராயிற்று. ''அப்பா சிட்டுக் குருவியே, நீயல்ல உன்னைப் போல் ஆயிரம் சிட்டுக் குருவிகள் வந்தாலும் என்னைக் கட்டிப் போட முடியாதாக்கும்.''

''பார்க்கலாம், பார்க்கலாம், அதையும் பார்த்துவிடலாம்!'' என்றபடி பறந்து சென்றது அப்பா சிட்டுக் குருவி. குறட்டை விடலாயிற்று முதலை.

அப்பா சிட்டுக்குருவி அன்று முழுதும் ரொம்ப 'பிஸி'யாக இருந்தது. தன் சக சிட்டுக் குருவிகளையெல்லாம் தனித்தனியாகப்போய்ச் சந்தித்துப் பேசிற்று. மறுநாள் அதிகாலையிலேயே எல்லாச் சிட்டுக் குருவிகளும் எழுந்திருந்துவிட்டன. ஆயிரத்துக்கும் மேலே இருக்கும். பரபரவென்று எல்லாச் சிட்டுக்களும் வேலை செய்தன. காட்டுக் கொடிகளைக் கொண்டு வந்து முறுக்கி நீண்ட உறுதியான கயிறு தயாரித்து விட்டன.

பலபலவென்று விடிந்தது. துதிக்கையை ஆட்டி அசைத்தபடி வழியில் எதிர்ப்பட்டவைகளைத் துவைத்துத் துவம்சம் செய்தபடி வந்து கொண்டிருந்தது யானை அண்ணன். 'தம்' என்று வேண்டுமென்றே வந்து அப்பாக் குருவியின் கொய்யா மரத்தில் மோதியது. அது வந்து இப்படி மோதும் என்று அம்மா சிட்டுக் குருவிக்குத் தெரியுமாதலால் அது ஜாக்கிரதையாக இருந்தது. கூட்டிலிருந்து உருண்டு விழவில்லை.

''அப்பா சிட்டுக் குருவியாரே! எங்கே இருக்கிறீர்? இதோ ஐயா வந்து உன் மரத்தில் மோதினேனே என்னைக் கட்டிப் போடுகிறீரா? கயிறு தயாரா?'' என்று கேட்டது கிண்டலாக.

''கயிறு தயாராக இருக்கிறது. உம்மை நகர முடியாமல் கட்டத்தான் போகிறேன்'' என்று கூறிக்கொண்டு சிட்டுக் குருவிக் கூட்டம் தாங்கள் தயாரித்த காட்டுக் கொடிகளாலான வடக் கயிற்றைக் கொண்டு யானையைச் சுற்றிச் சுற்றி வட்டமடித்தபடி கட்டிப் போட்டது. இறுக்கமாக, அழுத்தமாகக் கட்டுப் போட அவை போட்ட கூச்சல் ஏகமாக இருந்தது. எப்படியோ கொடிக் கயிற்றினால் யானையாரை இறுக்கமாகக் கட்டி விட்டன சிட்டுக் குருவிகள்.

''யானையாரே, நான் 'இழுக்கலாம்' என்று குரல் கொடுத்ததும் நீர் உமது பலத்தைக் காட்ட இழுத்துக் கயிற்றை அறுத்துக் கொண்டு விடுதலை பெற வேண்டும். நான் மறு முனையில் கயிற்றைப் பிடித்துக் கொண்டிருப்பேன்'' என்றது அப்பா சிட்டுக்குருவி.

யானைக்குச் சிரிப்பான சிரிப்பு. 'சிட்டுக் குருவி தன்னைக் கட்டுவதாவது? உடலை அசைத்தாலே ஒன்பது பல்டி அடித்தபடி சிட்டுக்குருவி தன் காலடியில் வந்து விழுமே' என்று எண்ணிய யானை விஷமச் சிரிப்புடன் ''அப்படியே ஆகட்டும் சிட்டுக் குருவியாரே. உறுதியாகக் கயிற்றைப் பிடித்துக் கொள்ளும், ஆமாம்!'' என்றது.

அப்பா சிட்டுக் குருவியும் அதன் நண்பர்களான சிட்டுக் குருவிகளும் கயிற்றின் மறு முனையுடன் மரங்களின் ஊடாகவும் புதர்களின் வழியாகவும் நதிக் கரைக்குப் பறந்து போயின. அப்பா சிட்டுக் குருவி குளிக்கும் இடத்திலே இன்னும் மிதந்து கொண்டிருந்த முதலை, இவர்களைப் பார்த்துக் கடகடவென்று சிரித்தது.

''நீயும் உன் தோழர்களும் என்னைக் கட்டிப் போடக் கயிற்றுடன் வந்திருக்கிறீர்களா, அப்பா சிட்டுக் குருவியே?'' என்று கேட்டது.

''ஆமாம். உன்னை உறுதியாகப் பிணைத்து அசைய முடியாமல் கட்டிப் போடப் போகிறேன்'' என்றது அப்பா சிட்டுக்குருவி.

''ம்... நடக்கட்டும்!'' என்று நகைத்தது முதலை. சிட்டுக் குருவிகள் கீச் மூச் காச் மூச் என்று சத்தமிட்டபடி மேலும் கீழும் இங்கும் அங்கும் பறந்து

ஏப்ரல் 13ல்

கோகுலம்

புத்தாண்டு இதழிலிருந்து

திருமுருக கிருபானந்தவாரியார்

எழுதும்

அறநெறி

ஆரம்பமாகிறது

கயிற்றைக் கொண்டு முதலையின் உடலைச் சுற்றிச் சுற்றி இறுக்கிக் கட்டின.

''நான் இழு என்று குரல் கொடுக்கும்போது நீ இழுக்க வேண்டும். உன் பலத்தைப் பார்க்கலாம்'' என்று பறந்து கொண்டே சொல்லிற்று சிட்டுக் குருவி. முதலைக்கு அதற்குப் பதில் சொல்லக் கூடச் சோம்பலாக இருந்தது. 'ம்' என்று வெறுமே 'உம்' கொட்டியது. நீரில் வளையங்கள் தோன்றி மறைந்தன. சிட்டுக் குருவியும் புதர்களில் மறைந்தது.

கயிற்றின் ஒரு முனைப் பகுதியில் யானையும் மறு முனைப் பகுதியில் முதலையும் கட்டுண்டு கிடந்தன. இரண்டையும் இணைக்கும் கயிறு புதர்களிடையே சென்றது. அதன் மையப் பகுதியில் போய் உட்கார்ந்து கொண்டது அப்பா சிட்டுக் குருவி. அதை யானையினுலோ முதலையினுலோ பார்க்க முடியாது. தன் குரலை உயர்த்தி ''இழுக்கலாம்'' என்று பலமாகக் கிறீச்சிட்டது சிட்டுக் குருவி.

யானை ஒரு இழு இழுத்தது பலமாக, 'சிட்டுக் குருவியார் பல்டி அடித்துக் வந்து விழப் போகிறுர்' என்று நினைத்தபடியே. ஆனுல் அடுத்த விநாடி யானையார் நிலை தடுமாறும்படி தான் இழுக்கப்பட்டதைக் கண்டு பிரமித்துப் போனுர். ''சிட்டுக் குருவிக்கு இத்தனை பலமா? அடேயப்பா!'' என்று திகைத்துப் போனுர் யானையார். சோம்பேறியான முதலை கயிற்றை இழுக்கவே நினைக்கவில்லை. சின்னச் சிட்டுக் குருவி தானே என்று அலட்சியமாக இருந்த அதை நீரிலிருந்து வெளியே வரும்படி ஓர் இழுப்பு இழுக்கவே யானையை விட அதிக ஆச்சரியத்தில் மூழ்கியது முதலை. ''அடேயப்பா! சிட்டுக் குருவிக்கா இத்தனை பலம்?'' என்று வியந்தது முதலை.

சிட்டுக் குருவியின் நினைவாகவே யானையும் முதலையும் மாறி மாறி இழுத்தன. சிலவேளைகளில் யானை தடுமாறி விழும்படி முதலை இழுத்தது. முதலை நீரிலிருந்து கரைக்கு வந்து விழும்படி யானை இழுத்தது. சில சமயம் முதலையின் மூர்க்கத்தனமான இழுப்புக்கு ஈடு கொடுக்க யானை தன் துதிக்கையினுல் பெரியதொரு மரத்தைப் பிடித்துக் கொண்டு மூச்சுக் கட்டி இழுக்க வேண்டியிருந்தது. இரண்டுமே சமமான பலம் கொண்டவை. ஒன்றை ஒன்று ஓர் அங்குலம் கூட நகர விட்டுக் கொடுக்கவில்லை. அதிசயமான பலப் பரீட்சை அது. சூரியன் உச்சிக்கு வந்தவன் மேற்கே சாயலானுன். 'டக் அப் வார்'— கயிறு இழுக்கும் பலப் பரீட்சை முடியவில்லை. வியர்வை, பசி, களைப்பு தாகம் எடுத்தன. அவை முக்குவதையும் தம் பிடித்து இழுப்பதையும் பெருமூச்சு விடுவதையும் மூச்சு வாங்குவதையும் கண்டு சிட்டுக் குருவிகள் ஆகாயத்திலே பறந்து பறந்து சிரித்துக் கொண்டிருந்தன.

''சிட்டுக் குருவியைப் பார்த்து நான் அப்படி ஏளனமாக நகைத்திருக்கக் கூடாது'' என்று எண்ணியது யானை

''சிட்டுக் குருவியிடம் வீண் வம்புக்குப் போயிருக்க வேண்டாம்'' என்று நினைத்தது முதலை. இரண்டும் விடாமல் மாறி மாறி இழுத்துக் கொண்டிருந்தன. வெட்கமும் வேதனையும் களைப்பும் மேலிட்டன அவைகளுக்கு.

மாலை மயங்கி இருள் கவியும் நேரத்தில் யானையார் தொய்ந்த குரலில் ஊர்க் குருவிகளிடம் கூறினார்: ''அப்பா சிட்டுக் குருவியாரிடம் சொல்லுங்கள், இழுத்தது போதுமாம் என்று. என் கட்டை வந்து அவிழ்த்துவிடச் சொல்லுங்கள். இனி அவரிடம் முரட்டுத்தனமாக நடந்து கொள்ள மாட்டேன் என்றும் கூறுங்கள்.''

அதே சமயம் முதலையும் தனக்குத் தானே சொல்லிக் கொண்டது இப்படி.. 'காட்டில் உள்ள மிருகங்கள் எல்லாம் தண்ணீர் குடிக்க இங்கு வரும். அப்போது நான் இப்படிக் கட்டுண்டு கிடப்பதைக் கண்டால் எல்லாம் சிரிக்கவல்லவா செய்யும்?' உடனே உரத்த குரலில் கூறிற்று: ''சிட்டுக் குருவியாரே, சிட்டுக் குருவியாரே! தயவு செய்து உமது பலத்தைக் காட்ட இழுத்தது போதும். வந்து என் கட்டுக்களை அவிழ்த்து விடும். இனி நான் நீர் ஸ்நானம் செய்யும் இந்த இடத்தின் பக்கமே வர மாட்டேன்'' என்றது.

''சரி, சரி, வந்தாயா வழிக்கு?'' என்று கூறியபடி அப்பா சிட்டுக் குருவி தன் நண்பர்களுக்குச் சமிக்ஞை செய்தது. ஊர்க் குருவிகள் எல்லாம் ஓடோடி வந்து கொத்திக் கொத்தி யானை முதலை இரண்டினுடைய கட்டுக்களையும் அவிழ்த்து விட்டன. சிட்டுக் குருவியிடம் தோல்வி கண்டோமே என்ற அவமானத்தினால் தலைகுனிந்தபடி யானை காட்டுக்குள் ஓடி ஒளிந்து கொண்டது. கட்டவிழ்ந்த முதலை நதியோரத்தில் வளர்ந்திருந்த நாணற் புதர்களிடையே புகுந்து தன்னை மறைத்துக் கொண்டது. பகலெல்லாம் கட்டுண்டு கிடந்த கடுப்பு அதற்கு. இரண்டுக்குமே உண்மை தெரியாது. இதன் பிறகு யானை கானகத்தில் ரொம்ப அமைதியாக உலாவியது. முதலையோ அப்பா சிட்டுக் குருவியின் ஸ்நான கட்டத்துப் பக்கம் வாலைக் கூட நீட்டுவதில்லை. அப்பா சிட்டுக் குருவியும் அதன் தோழர்களும் தங்கள் தங்கள் மனைவிமார்களிடம் போய், யானைக்கும் முதலைக்கும் நடந்த பலப் பரீட்சையைச் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தன. பிறகு தங்கள் சின்னத் தலையை இறக்கைக்குள் நுழைத்தபடி ஆனந்தமான தூக்கத்தில் ஆழ்ந்தன.



ஒருவர்: என்னங்க, பொன்னம்பலம் வீட்டில் ஒரே கூட்டமா இருக்கே, ஏன்?

மற்றவர்: அவர் பதுக்கி வைத்திருந்த பொன் அம்பலம் ஆகிவிட்டது; அதனால் தான்.

"நிறைய விளக்குகளை வாங்கி வச்சிருக்கிங்களே, ஏன்?"

"என் எதிர்காலம் ஒரே இருட்டாக இருக்கும் என்று ஜோசியர் சொன்னார். அதனால் இப்பவே நிறைய விளக்குகளை வாங்கி வச்சுக்கிட்டேன்!"

ஒருவர்: ஜவுளிக்கடையில் 'நைஸாக'ப் பார்த்து ஒரு வேஷ்டி எடுத்தேன்.

மற்றவர்: என்னங்க, நீங்களே இப்படித் திருட்டுத்தனம் செய்யலாமா?

ஒருவர்: அட, நீங்க ஒண்ணு, நைஸ் வேஷ்டியா ஒண்ணு வாங்கிக் கொண்டேன்னு சொல்ல வந்தா....

"சோப்பு கொடுங்க...."

"501 சோப்பா?"

"அவ்வளவு சோப்பு வேண்டாங்க, ஒண்ணே ஒண்ணு மட்டும் போதும்.

—க. குமரேசன்

ஒருவர்: என்னங்க, ஓட்டைப் பலூனைத் தறீங்களே? ஊதவே முடியலியே!

கடைக்காரர்: நீங்கதானே 'ஊதா' பலூன் கேட்டீங்க...!

பேரன்: பாட்டி, இப்போ நான் வாங்குற சம்பளம் ஒரு பெரிய மானேஜருடைய சம்பளமாக்கும்.


பாட்டி: மத்தவங்க சம்பளத்தையெல்லாம் நீ ஏண்டாப்பா வாங்கிக்கறே?

சிறுவன் (பாட்டியிடம்): பாட்டி, ஆந்தைக்குப் பகலிலே கண் தெரியுமா?

பாட்டி: எனக்குத் தெரியாதுடாப்பா.

சிறுவன்: உனக்கு யாரு கேட்டா? ஆந்தைக்குத் தெரியுமான்னுதான் கேட்டேன்

-ச. பழனியப்பன்



துணிவு வேண்டும்

நித்தம் நித்தம் பள்ளியில்
நிறைய 'மார்க்கு' வாங்கலாம்
மெத்தப் படிக்க நெஞ்சிலே
மிகவும் துணிவ வேண்டுமே!

பந்த யத்தில் கலக்கலாம்-
பரிசு பலவும் வாங்கலாம்!
முந்திச் சென்று வென்றிட
நெஞ்சில் துணிவு வேண்டுமே!

ஓடும் ஆற்று நீரையும்
ஓடம் இன்றிக் கடக்கலாம:
ஓடி ஆடி நீந்திட
வேண்டும், துணிவு நெஞ்சிலே!

கோல நலவும் செல்லலாம்-
குதித்து அங்கு ஆடலாம்!
நீல வானம் கடந்திட
நெஞ்சில் துணிவு வேண்டுமே!



அழகு பழனிச்சாமி



பாருங்கோ!

ஆற்றோர மாயிருக்கும்
வயலைப் பாருங்கோ! — நாளும
அங்கேபலர் வேலைசெய்யும்
அருமை பாருங்கோ!

சேற்றுழவு, பரம்படிக்கும்
செயலைப் பாருங்கோ! — அவர்
சோர்வின்றிப் பணியாற்றும்
சிறப்பைப் பாருங்கோ!

நாற்றுநட்டு நீர்பாய்ச்சும்
நேர்த்தி பாருங்கோ! — நிலத்தில்
நாளெல்லாம் பயிர்செழிக்கும்
வளத்தைப் பாருங்கோ!


ஏற்றமிகு உழவர்தம்
எழுச்சி பாருங்கோ! — அங்கே
எழில்சிந்தும் வயல்வெளியின்
அழகைப் பாருங்கோ!

வாட்டமுறும் மக்கள்தம்
பசியைப் போக்கவே — உழவர்
வலிமையோடு ஆற்றுகின்ற
உழைப்பைப் பாருங்கோ!

நாட்டமுடன் உழவர்தம்
உழைப்பை வாழ்த்துவோம்; நாட்டை
நாடிவரும் பஞ்சமெல்லாம்
ஓடும், பாருங்கோ!

சென்னையில் கிரிக்கெட் விழா

வி. எஸ். ரங்கா



[சென்னையில் நடந்த கிரிக்கெட் பற்றிய விமர்சனக் கட்டுரைப் போட்டியில் ஏராளமான கோகுலம் வாசகர்கள் உற்சாகமுடன் கலந்து கொண்டார்கள். எல்லோருக்கும் நமது நல்வாழ்த்துக்கள். போட்டிக்கு வந்த கட்டுரைகளைப் படித்துப் பார்த்துப் பரிசுக் குரிய கட்டுரையைத் தேர்ந்தெடுக்க உதவிய கல்வி உதவி ஆசிரியர் திரு குண்டுமணி அவர்களுக்கு நமது நன்றி உரியது.

பரிசுக்குரிய கட்டுரையை எழுதியவர் செல்வன் வி. எஸ். ரங்கா. சென்னை சேத்துப்பட்டு கிறிஸ்துவக் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் ஏழாம் வகுப்பு படிக்கிறார். செல்வன் ரங்காவுக்கு 2-2-75 இதழ்க் கோகுலத்தில் குறிப்பிட்டபடி 'கிரிக்கெட் செட்' பரிசாக வழங்கப்படும். — ஆசிரியர்]

பூவா - தலையா ?

நாங்கள் மைதானத்துக்குள் செல்வதற்கு ஒரு வரிசை. அதில் நின்று நாங்கள் உள்ளே சென்றோம். அநேகம் பேர்கள் இரவிலேயே அங்கே தூங்கிவிட்டுக் காலையில் எழுந்து இடம் பிடித்திருந்தார்கள். உள்ளே இடத்தில் அமர்ந்ததும் பக்கத்தில் ஒரு சண்டை தொடங்கியது. வாய்ச் சண்டை அதிகமாகிக் கைச் சண்டையாக வலுத்தது. மேலே இருப்பவர் வாழைப் பழத் தோலால் அடித்தார். கீழே இருப்பவர் அதைக் 'காட்ச்' பிடித்து, அதை அவர் மேல் திரும்ப வீசினார். அதற்குள் 'பட்டோடியும்' 'லாயிடும்' பூவா — தலையா போடுவதற்கு மைதானத்துக்குள் நுழைந்தார்கள். 'பட்டோடி' வெற்றி பெற்றார். சண்டையும் ஓய்ந்தது' சந்தோமும் நிலவியது.

பாவம், இன்ஜினியர் !

இன்ஜினியரும் ஸோல்கரும் ஆடத் தொடங்கினார்கள். அவர்கள் ஆட்டம் 'போர்' அடிக்கவே மீண்டும், 'காலரி'யில் சண்டை தொடங்கியது. அப்போது கீழே இருப்பவரை அடிக்க மேலிருந்தவர் கையை ஓங்கின சமயம் பார்த்து இன்ஜினியர் ஒரு 'பௌண்டரி' அடித்தார். அடிக்க ஓங்கிய கை, கைத்தட்ட ஆரம்பித்தது. பிறகு சிறிது நேரம் ஆட்டம் சுவாரசியமாக இருந்தது. இன்ஜினீயர் இரு 'பௌண்டரி'களை அடித்தார்.

ஜூலியனிடமிருந்து வந்த பந்து என்ஜினீயரின் மட்டையை உரசிக் கொண்டு கிரீனிட்ஜிடம் சென்றது. அவர் உடனே குட்டிக்கரணம் அடித்துப் பிடித்தார். அவர் அம்பயரிடம், ''ஹௌ இஸ் தட்?'' என்று கேட்டார். அம்பயர் 'அவுட்டில்லை' என்று கூறினார். முர்ரே சிறிது கோபத்துடன் மீண்டும் கேட்டார். இரண்டு அம்பயர்களும் கலந்து ஆலோசித்து என்ஜினியர் அவுட்டில்லை என்று கூறினர். உடனே எல்லா மேற்கிந்திய ஆட்டக்காரர்களும் அம்பயர்களைப் பார்த்து முறைத்தார்கள். அம்பயர் மறுபடியும் லெக் அம்பயரைக் கேட்டுவிட்டுக் கையை உயரத் தூக்கி விட்டார். இத்தனை காலதாமதமான முடிவைக் கண்டு இன்ஜினியர் அம்பயரை முறைத்துப் பார்த்துக் கொண்டே திரும்பிச் சென்றார். பாவம், இன்ஜினியர் !

ரங்காச்சாரியும் பிராட்மனும்

பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த வயதானவர், ''என்னய்யா ! அந்தக் காலத்திலே மெட்ராஸ்லே ரங்காச்சாரியின் போலிங்கில் 'பிராட்மன்' ஆடுவார் பாரு....'' என்றார். பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தவர், ''என்ன சார், ரங்காச்சாரியும் பிராட்மனும் எப்போ மெட்ராஸ்லே ஆடினாங்க?'' என்றார்.

''உனக்குத் தெரியாது. அப்ப நீ குழந்தையாக இருப்பாய். சும்மா உளறாதே. மேட்ச பார்க்கலாம்'' என்று முடித்துக் கொண்டார் பெரியவர்.

ஹீரோ விசுவநாத்

என்ஜினீயர் அவுட் ஆன பிறகு 'பட்டோடியும்' கெய்க்வாடும் வந்து சென்றார்கள். ஆனால் விசுவநாத்தான் நிலைத்து நின்று நன்றாக ஆடினார். பான்ட்

பௌலர் ராபர்ட்ஸ் வீசிய பந்துகளைக் கஷ்டப்படாமல் அடித்தார். மதன்லால், காவ்ரி, பிரசன்னா ஒன்றன்பின் ஒன்றாக வந்து ஆடிவிட்டுச் சென்றனர். விஸ்வநாத்தும் பேடியும் ஆடிக்கொண்டிருந்த தருணத்தில் பழைய சண்டை மீண்டும் தொடங்கியது. எல்லாருடைய பார்வையும் சண்டை நடந்த இடத்துக்குத் திரும்பியது. அப்போது மைதானத்தில் ஓர் ஆச்சரியக் காட்சி! ராபர்ட்ஸ் பந்தில் பேடி 'அவுட்' ஆகப் போகிறார் என்று எண்ணியவர்களுக்குப் பெரும் ஏமாற்றம். ராபர்ட்ஸ் பந்தில் பௌலர் பேடி ஒரு 'பௌண்டரி'யே அடித்தார். இது எல்லோரையும் வியப்பு வெள்ளத்தில் மூழ்கடித்தது!

இப்பொழுது விசுவநாத் எடுத்த ரன்கள் 86. கரை புரண்ட உற்சாகத்தில் அங்கங்கே ஜால்ராக்கள் 'ஜல்' 'ஜல்' என்று முழங்கிக் கொண்டிருந்தன. டிரம் பெட்கள் 'பூம்', 'பூம்' என்று ஒலித்துக் கொண்டிருந்தன. மேற்கிந்தியக்கோஷ்டி பாய்ஸ் பல்லைக் கடித்துக் கொண்டு பந்தை வேகமாக வீசினார். பந்தை அதே வேகத்தில் 'பௌண்டரிக்கு' அனுப்பினார் 'சித்திரக் குள்ளர்' விசுவநாத். எங்கு பார்த்தாலும் மக்களின் ஆரவாரமும் கைத்தட்டலும் வானைப் பிளந்தன. அவர் 92 ரன்கள் எடுத்திருந்தார். கிப்ஸ் இடமிருந்து வந்த பந்து பேடியின் ஸ்டம்பைத் தட்டிக் கொண்டு சென்றது. பௌலர் சந்திரசேகர் வந்தார். பக்கத்திலிருந்த காளிசரண் மட்டையை அவரிடமிருந்து வாங்கி எப்படி ஆடவேண்டும் என்று மைதானத்தில் பயிற்சி அளித்தாரே, பார்க்கலாம்!

விஸ்வநாத் 97 நாட் அவுட். இன்னும் சதம் எடுக்க மூன்று ரன்கள்தான் பாக்கி இருந்தது!

கிரிக்கெட் மைதானத்தில் ஓட்டப் பந்தயம் - ரசிகர் வெற்றி!

அப்பொழுது ரசிகர் படை ஒன்று வேலியைத் தாண்டிக் கொண்டு உள்ளே நுழைந்தது. விசுவநாத்துக்கு மாலை போடுவதற்கு. அவர்களைத் தடுப்பதற்குக் கிரிக்கெட் கழக வாலண்டியர்கள் ஓடினார்கள். இவர்கள் ஓட, அவர்கள் ஓட, மைதானத்தில் கிரிக்கெட் ஆட்டத்துக்குப் பதில் ஓட்டப் பந்தயமே நடந்தது. வேலி தாண்டிய ரசிகர்கள் விஸ்வநாத்தை அடைந்ததும் மற்ற ரசிகர்கள் வெற்றி முழக்கமிட்டனர். அவர்களில் ஒருவர் விசுவநாத்துக்கு மாலையைப் போட்டுவிட்டுத் திரும்பினார். அப்பொழுதுசந்திரசேகர் விசுவநாத்தோடு ஆடிக் கொண்டிருந்தார். வெற்றி முழக்கத்துக்கும்மாலைக்கும் பயனில்லாமல் போச்சு! ஒன்றுக்கு இரண்டாய் ஏமாற்றம்! சந்திரசேகர் 'அவுட்' ஆகிவிட்டார்! விசுவநாத்தும் ஏமாற்றத்துடன் 'பெவிலியன்' திரும்பினார். முதல் இன்னிங்ஸில் இந்தியக் கோஷ்டியினர் 190 ரன்கள் எடுத்திருந்தனர்!

மேற்கிந்தியத் தீவு கோஷ்டியினர், 'மட்டை' பிடித்து ஆடத் தொடங்கினர். இருபது ரன்களுக்குப் பிறகு ஒரு விக்கெட் இழந்தனர். மணி 4.45 கிரீனிட்ஜ் அவுட் ஆகிவிட்டார்! மணி ஆகி விட்டதனால் இரவுக் காவலர் ஹோல்டரை அனுப்பினார் லாயிட். பாவம், அவருக்கு ஏமாற்றம். ஹோல்டர் ஆடிய முதல் பந்து மட்டையில் பட்டு 'ஸ்டம்பை' அடிக்க உருண்டு சென்றது. அதைத் தடுக்க முயன்ற ஹோல்டர் தோல்வி அடைந்தார். மறுநாள் ரிச்சர்ட்ஸும் காளிசரணும் ரன்களை ஒன்றரை சதத்துக்கு எடுத்து வந்தார்கள். பிறகு அவர்கள் இருவரும் உள்ளே 'அவுட்'டாகி சென்றனர். மர்ரேயும் காப்டன் லாய்டும் ரன்களை 160க்கு எடுத்து வந்தனர். பிறகு காப்டன் லாய்ட் பிரசன்னாவின் 'போலிங்கி'ல் அவருக்கே திருப்பிக் 'காட்ச்' கொடுத்தார். அவரும் லாகவமாகப் பிடித்துக் கொண்டார்.

மேற்கிந்தியக் கோஷ்டி ஆட்டக்காரர்களான மர்ரே, ஜூலியன், பாய்ஸ் ஆகியோரும் கேப்டனைப் பின்பற்றி மைதானத்தை விட்டுக் கிடுகிடுவென்று சென்றார்கள்!

ரபர்ட்ஸின் ஸிக்ஸர்கள்!

கிப்சும் ராபர்ட்ஸும் ஆடிக் கொண்டிருந்தார்கள். பிரசன்னாவின் பந்து வீச்சில் பாஸ்ட் பௌலர் ராபர்ட்ஸ் ஆடினார். அப்பொழுது ஒரு ஸிக்ஸரை பெல்ஸ் ரோட்டு பக்கம் ராபர்ட்ஸ் அடித்தார். இதைப் பார்த்தவுடன் வாய்க்கால் ரோடு பக்கம் இருந்தவர்கள் ஆரவாரிக்கவே அவர்களுக்கும் கண்காட்சிக்காக ஒரு சிக்ஸர் அனுப்பினார். இந்த அபூர்வக் கண்காட்சிக்குப் பிறகும் மேற்கிந்தியத் தீவு கோஷ்டியினர் இந்தியக் கோஷ்







டியைவிட இரண்டு ரன்களே அதாவது 192, ஸ்கோரே எடுத்திருந்தனர்.

அறுபத்திமூவரும், இந்தியக் கோஷ்டி காவலர் கெய்க்வாடும்!

இரண்டாம் இன்னிங்ஸில் வந்த வேகத்திலே என்ஜினீயர் மூன்று 'பௌண்டரிகளை' அடித்துவிட்டு வீடு திரும்பினார். மயிலாப்பூரில் அறுபத்து மூவர் போல் இந்தியக் கோஷ்டி பாட்ஸ்மன்கள் ஒருவர் பின் ஒருவராகச் சென்று கொண்டிருந்தனர். விஸ்வநாத்தும் கெய்க்வாடும் ஸ்கோரை விடாப்பிடியாக மேலே இழுத்துக் கொண்டு சென்றனர். விஸ்வநாத் அவுட் ஆகிவிட்டாலும் கோட்டைக் காவலர் கெய்க்வாட் ஒருவாறு எண்ணிக்கையை 256க்கு இழுத்துச் சென்றார்.

அனுபவம் பேசியது!


இரண்டாம் இன்னிங்ஸை மேற்கிந்தியக் கோஷ்டி ஆடத் தொடங்கியது. பிரசன்னா வீசிய பந்து பிஃரட்ரிக்ஸின் மட்டையில் பட்டு, 'காட்ச்' பிடிமன்னன் ஸோல்கரிடம் சென்றது. உடனே அவர் ஒரு குட்டிக்கரணம் அடித்து அந்தக் 'காட்சை'ப் பிடித்தார்.

பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த ஓர் அனுபவசாலி, ''சுலபமான இந்தக் காட்சை இப்படிக் குட்டிக்கரணம் அடித்துப் பிடித்தால்தான் ஐந்தாவது டெஸ்டுக்கு இவருக்கு 'சான்ஸ்' கிடைக்கும்'' என்றார்.

ரிச்சர்ட்ஸ் சிறிது நேரம் ஆடினார். பிரசன்னா வீசிய பந்தில் ஒரு 'காட்ச்' முதல் 'ஸ்லிப்'புக்குச் சென்றது. அங்கு யாரும் இல்லாததனால் இன்ஜினீயர் முதல் ஸ்லிப்புக்குத் தாவிச் சென்று காட்சைப் பிடித்தார்.

லாயிட் வந்தார் - வந்தவுடனே சந்திரசேகருக்கு ஒரு 'காட்சை'க் கொடுத்துப் பலி ஆகவிருந்தார். அதை அவர் கோட்டை விட்டு விட்டார். பிரசன்னாவின் பந்தை 'புல்டாஸ்' தூக்குவதற்கு கிரீசைத் தாண்டிக் கொண்டு சென்றார். ஆனால் பந்து மட்டையில் படாமல் என்ஜினீயரிடம் சென்றது. என்ஜினீயரும் பந்தைப் பிடித்து 'ஸ்டம்பில்' அடித்து விட்டார். காப்டன் லாயிட் அந்தப் பந்தை அடித்திருந்தால் அது சிலோனுக்குப் போயிருக்கும் என்று 'டிரான்ஸிஸ்டர்' கூறியது. பாவம், காப்டன் லாயிட்!





காளிசரணின் கோபம்!

சந்திரசேகர் பந்தில் காளிசரணுக்கு ஓர் அடிபட்டது. அதைப் பொறுத்துக் கொண்டு மீண்டும் ஆடினார்! பட்ட காலிலே படும் என்னும் பழமொழியை மெய்ப்பிப்பது போல் மீண்டும் அவருக்கு அடிபட்டது. அதனால் கோபமுற்ற காளிசரண் சந்திரசேகரை அடிப்பதாக நினைத்துக் கொண்டு, மட்டையை ஓங்கித் தரையில் அடித்தார். சீரியஸ் ஆட்டத்துக்கு நடுவே இப்படியொரு நகைச்சுவைக் காட்சி!

பலே பிரசன்னா, பேஃதி!

காளிசரண் ஆடிக் கொண்டிருந்தார். பிரசன்னா பந்து ஒன்றை 'கட்' செய்தார். அது 'பௌண்டரி' நோக்கிச் சென்றது. அசோக் மன்காட் அதை நிறுத்தினார். காளிசரண் ஒரு ரன் எடுத்துவிட்டு இரண்டாவது ரன்னுக்காக ஓடினார். பம்பாயில் மாங்காய் அடித்துப் பழக்கப்பட்ட மன்காட் ஸ்டம்பை வேகமாக வீசி அடித்தார். பலே ஆசாமி காளிசரண் அவுட்!

சர்ர்ர்! ஒரு ராக்கெட் பட்டோடியின் காலுக்கருகில் வந்து விழுந்தது. அவர் உடனே பயந்து திரும்பி ரசிகர்களுக்கு ஒரு கும்பிடு போட்டார். பௌலர் பிரசன்னாவும், பேஃதியும் நன்றாகப் பந்து வீசி மீதியிருந்தவர்களின் விக்கெட்டுகளை மளமளவென்று வீழ்த்தினர். சபாஷ், பிரசன்னா, பேஃதி!

வெற்றி உலா

பிரம்பட்டுகளும், ஜால்ராக்களும் அலற மக்களின் ஆரவாரத்துக்கிடையே பட்டோடியும் என்ஜினீயரும் மற்றவர்களும் மைதானத்தைச் சுற்றி வெற்றி உலாவந்தார்கள். இவ்வாறு பொங்கல் விழா கிரிக்கெட் விழாவாகமாறி ரசிகர்களுக்குப் பொங்கல் பரிசாக இந்தியா நான்காவது டெஸ்டில் வெற்றி பெற்றது.



மாயக் கோட்டையிலிருந்து தப்பி...

ஆரம்பம் 1

2

3

சுரங்கப் பாதை 19க்குப் போகவும்

5

6

வௌவால் மண்டபம் ஓர் ஆட்டம் இழப்பு

8

9

10

11

கோட்டைக் காவல்காரன் தூங்குகிறான் இரண்டு ஆட்டம் அதி. குப்படி

13

14

15

16

17

வழி தவறி விட்டது - 14க்குப் போ

19

20

21

22

23

வனதேவதை அருள் கிடைத்தது 29க்குத் தாவு.

25

26

27

குறுக்கு வழியில் 44க்குப் போகவும்

29

தவறான பாதை 26க்குத் திரும்பிப் போ.

31


32

33

34

பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருப்பீர்கள். ஓரேயடியாகப் பாடங்களிலேயே மூழ்கியிருந்தாலும் அலுப்புத்தட்டும். ஆகவே மூளைக்குச் சுறுசுறுப்பும் மனத்துக்கு உற்சாகமும் ஏற்படக் கொஞ்ச நேரம் ஏதாவது விளையாடினால் படிக்கும் பாடங்கள் மனத்தில் நன்கு பதியும். அதற்குத்தான் இங்கே இந்த விளையாட்டை வெளியிட்டிருக்கிறோம். மந்திரவாதியின் மாயக் கோட்டைக்குள் சிக்கிக் கொண்டிருப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள். அதிலிருந்து தப்புவதுதான் இந்த விளையாட்டு.





மாயக் கோட்டைக்குள் எத்தனை பேர் வேண்டுமானாலும் சிறைப்படலாம். ஒவ்வொருவரும் தங்கள் அடையாளமாக ஒரு பொருளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். பகடைக் காய்களையோ அல்லது நான்கு சோழிகளையோ உருட்டி எண்ணிக்கையைக் கணக்கிட வேண்டும். ஆரம்பத்தில் 4 போட்டுத்தான் ஆட்டத்தை ஆரம்பிக்க வேண்டும். அதன் பிறகு வண்ணக் கட்டங்களில் ஆங்காங்கே குறிப்பிட்டுள்ள கட்டளைகளின்படி காயை நகர்த்திக் கொண்டு வீடு போய்ச் சேர வேண்டும். மந்திரவாதியின் மாயக் கோட்டையிலிருந்து தப்பி முதலில் வீட்டுக்குப் போகிறவரே வெற்றியாளர். கடைசியாகச் சரியான எண்ணிக்கையை உருட்டித்தான் வீட்டுக்குள் புக வேண்டும்.

செயற்கைக் கம்பளி

விகேயெம்

மனிதன் குளிரிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் கதகதப்பாக இருப்பதற்கும் ஆட்டு ரோமத்திலான கம்பளி ஆடைகளையே நாடினான். பல நூற்றாண்டு காலப் பழக்கம் இது. கம்பளி நூல்களுக்கு இடையே சிறு சிறு நுண்ணிய காற்றுப் பைகள் இயற்கையாகவே அமைந்திருக்கும். காற்று ஓர் அரிதில் கடத்தி. (Bad conductor) ஆகவே உடலிலிருந்து உஷ்ணத்தைச் சுலபமாக வெளியேற விடாது. மிகச் சிறந்த தரமான கம்பளியைப் பெறுவதற்காகவே உலகம் முழுதிலும் கோடிக் கணக்கான ஆடுகள் கண்ணும் கருத்துமாக வளர்க்கப்பட்டு வருகின்றன. ஓர் ஆண்டில் ஓர் ஆடு எட்டுப் பவுண்டு கம்பளி தரக்கூடியது. இந்த அதிசயமான பொருளான கம்பளிக்கு ஈடாக வேறு ஒரு பொருளைத் தயாரிக்கவே முடியாது என்றே எண்ணி வந்தான் மனிதன். மனிதனின் தேவை அதிகமாகிக் கொண்டு வரும் நிலையில், இயற்கைச் செல்வம் அவன் வளர்ச்சிக்கு ஈடுகொடுக்க முடியாது போகும்போது, செயற்கைப் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்படுகிறான் மனிதன். அத்தகைய நிர்ப்பந்த நிலையில்தான் பல அற்புதமான புதிய பொருள்கள் பிறந்திருக்கின்றன. அப்படித் தோன்றியதுதான் செயற்கைக் கம்பளி!

இந்தச் செயற்கைப் பொருள் கம்பளியாகி விடாது. ஆனால் கம்பளியைப்போலவே அதன் குணங்களைக் கொண்டதாக விளங்குகிறது. அசல் கம்பளிக்குக் கொஞ்சமும் தொடர்பில்லாத பொருள்களிலிருந்து இந்த நகல் கம்பளி தயாராவதுதான் இதிலுள்ள விந்தை. சுண்ணாம்புக் கல், கண்ணாடி, பால், கடல் தாவரங்கள், சோளம், சோயா பீன்ஸ், ஏன் கண்ணாடி, மீன் ஆகியவற்றிலிருந்தும்கூடச் செயற்கைக் கம்பளியைத் தயாரிக்கிறார்கள்!

பாலை வடிக்கும்போது கேஸீன் (Casein) என்ற பொருள் கிடைக்கிறது. இத்துடன் முதலில் காஸ்டிக் சோடாவைச் சேர்த்ததும் செயற்கைக் கம்பளி தோன்றுகிறது. வெல்லப் பாகு போன்ற இதை மிக நுண்ணிய துவாரமுள்ள குழாயின் வழியாக அழுத்தி வெளியேறச் செய்யும்போது மிக மிக நேர்த்தியான நூல் திரவ நிலையில் வெளிப் படுகிறது. இப்போது இது பசை போல ஒட்டிக் கொள்ளக்கூடிய தன்மையோடிருக்கும். இந்தப் பசை போன்ற நூலை அமிலத்தினுள் முக்கி எடுக்கிறார்கள். அப்போது இது கெட்டியான நூலாகிறது. இந்த நூலை நைலான் இழைகளுடன் கலந்து, செயற்கைக் கம்பளி ஆடைகளை உருவாக்குகிறார்கள்.

இதே மாதிரி கடல் தாவரங்களுக்கு ரஸாயன மாற்றம் தரும்போது ஒரு வகைப் பாயஸம் போலாகிறது. இந்தப் பாயசத்தை மைக்ரோஸ்கோபிக் (அணுத்துளைக்) குழாய் மூலம் அழுத்தம் கொடுத்து வெளியேற்றும்போது வெளிப்படும் இழைகளுக்கு ரஸாயனப் பூச்சுக் கொடுத்து உறுதியான இழைகளாக்குகிறார்கள்.


மிகவும் வெற்றிகரமான செயற்கைக் கம்பளி சுண்ணாம்புக் கல்லிலிருந்து



தயாரிக்கப் படுகிறது. சுண்ணாம்புக் கல்லிலிருந்து தயாராகும் செயற்கைக் கம்பளி நூலினால் ஆன ஆடைகள் மிருதுவாகவும் அதிக கதகதப்பாகவும் பூச்சிகளால் அழிக்கப்படாததாகவும் இருக்கின்றன. சுண்ணாம்புக் கல் களி மண், ஃபுளோர்ஸ்பார் (Fluorspar) என்னும் பொருள் இவை மூன்றையும் 1600 டிகிரி செண்டிகிரேட் கொதி நிலையுடைய உலைக்குள்ளிடுகிறார்கள். அப்போது கண்ணாடிக் குழம்பு போன்ற ஒரு பொருள் கிடைக்கிறது. உலையின் அடிப்பாகத்திலிருந்து இந்தத் திரவப் பொருள் மிக மிக நுண்ணிய துவாரத்தின் வழியே வெளியேறச் செய்கின்றனர். எப்படி? குழம்பான இதன் மேல் பகுதியில் மிக அதிகமான அழுத்தத்தில் நீராவியைச் செலுத்துகிறார்கள். அப்போது கம்பளியே போன்ற நூலிழைகள் கொத்துக் கொத்தாக வெளிப்படுகின்றன. இதைச் சிக்கெடுத்து முறுக்கேற்றிச் சிட்டம் போட்டு வைப்பார்கள்.

கண்ணாடியிலிருந்து தயாராகும் கம்பளி நூலைத்தான் இப்போதெல்லாம் ஆடைகள் தயாரிக்க அதிகமாக உபயோகப்படுத்துகிறார்கள். அசல் கம்பளியைப் போலவே கண்ணாடி நூல் கம்பளிகள் இருப்பதோடு நெருப்பினால் பாதிக்கப்படாததாகவும் இருக்கிறது. கண்ணாடிக் கம்பளியினால் தயாரிக்கப்பட்ட ஆடை மீது நெருப்புத் துண்டை வைத்தாலும் அதில் கறை ஏற்படுமே தவிரக் கருகிப் போவதில்லை. இவ்வகை ஆடைகளின் மூலமாக உஷ்ணம் ஊடுருவினாலும் அதன் கீழே தீப்பிடிக்கக் கூடிய பொருள்கள் இருந்தாலும் அவை பற்றிக் கொள்ளுவதில்லை.

கண்ணாடிக் கம்பளி நூல் தயாராவது எப்படி? ஆயிரக் கணக்கான கண்ணாடிக் கோலி குண்டுகளை மின்சார உலையிலிட்டு உருக வைக்கிறார்கள். உருகிய கண்ணாடிக் குழம்பை முன்போலவே



நுண்ணிய குழாய்கள் மூலம் அழுத்தம் கொடுத்து வெளிப்படச் செய்கின்றனர். அப்போது வெளிப்படும் இழைகளின் கனம் எவ்வளவு தெரியுமா? ஓர் அங்குலத்தை ஐயாயிரம் பாகங்களாக்கினால் எவ்வளவு கனமிருக்குமோ அவ்வளவு. இத்தகைய நுண்ணிய இழைகள் மீது பலமான குளிர்ந்த காற்றை வீசச் செய்யும்போது கண்ணாடி இழைகள் மிருதுவான நூலிழைகளாக மாறுகின்றன. ஒரு பவுண்டு எடையுள்ள கண்ணாடி நூலில் 96,000 அடிகள் நீளமுள்ள கண்ணாடி இழைகள் இருக்கும் என்றால் கண்ணாடிக் கம்பளி இழைகள் எவ்வளவு மெல்லியதாக இருக்கும்—கற்பனை செய்யுங்களேன்!

செயற்கைக் கம்பளி தயாரிப்பாளர்களில் பலர் தாங்கள் தயாரிக்கும் பொருள் கம்பளிக்கு மாற்று என்று கூறுவதில்லை. கம்பளியையும் விடத் தரத்திலும் குணத்திலும் உயர்வானவை என்கிறார்கள். டெரிலின் என்பது செயற்கை நூலிழை. அசல் கம்பளியே போன்ற இத்தகைய நகல் கம்பளி நூலுடன் டெரிலின் இழைகளைக் கலந்து கவர்ச்சியான கம்பளி ஆடைகளைத் தயாரிக்கிறார்கள். கம்பளி ஆடைக்கு ஆடுகளின் தயவு இனி மனிதனுக்கு வேண்டாம்!





காளைமுக அரக்கன்

கிருஷ்ணவேணி

நீண்ட நெடுங்காலத்துக்கு முன்னே ஏதென்ஸ் நகரை ஆகியஸ் (Aegues) என்ற மன்னர் ஆண்டு வந்தார். இவருக்குத் தீஸியஸ் (Theseus) என்று ஒரு மகன். அஞ்சா நெஞ்சம் கொண்ட மாவீரனாக விளங்கினான் தீஸியஸ். நாடு சுபிட்சமாக இருந்தது. மக்கள் சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள். ஆனால் ஒரே ஒரு வேதனை மட்டும் அதீனியர்களை அரித்து வந்தது.

கிரீட் என்றொரு அண்டை நாடு. அதன் மன்னன் மீனாஸ் (Minos) மகத்தான படை பலம் கொண்ட மீனாஸ் அதீனியர்களைத் தாக்கி வெற்றி கொண்டான். நாடு திரும்பு முன் ஏதென்ஸ் மன்னனுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டான் மீனாஸ். தனக்குக் கப்பமாக ஆண்டுதோறும் ஏழு அதீனிய இளைஞர்களையும் ஏழு கன்னிகைகளையும் தன் நாட்டுக்கு அனுப்பி வைக்க வேண்டும். இதுதான் நிபந்தனை. இப்படி வரும் வாலிபர்களையும் கன்னிகைகளையும் மினோடார் (Minotaur) என்ற கொடிய ராட்சதனுக்குப் பலியாக்கினான். மினோடார் என்ற இந்த அரக்கனுக்குக் காளையின் தலை, மனித உடல். இவன் வசித்ததோ பல மர்மமான சுற்றுச் சுழல் பாதைகளையும் குகை வழிகளையும் கொண்ட ஓர் அமைப்புள்ள இடத்தில். இதற்கு 'லாப ரிந்த்' என்று பெயர். இதன் உள்ளே புகுந்தவர்களால் சுலபமாக வெளியே வர முடியாது. ஒவ்வோர் ஆண்டும் வசந்த காலத்தில் ஏதென்ஸ் நகரின் மையத்திலே இளைஞர்களும் கன்னிகைகளும் கூடுவார்கள். அவர்களிலே ஏழு பேர்கள் சீட்டுக் குலுக்கிப் போட்டுப் பொறுக்கி எடுக்கப்பட்டு கப்பலிலே கிரீட் தேசத்துக்கு அனுப்பப்படுவார்கள். அந்தக் கப்பலின் பாய் மரம் துக்கத்தின் அடையாளமான கறுப்புத் துணியால் ஆனது. கிரீட் தேசத்துக்குச் செல்லும் கப்பப் பொருளான கன்னிகைகளையும் வாலிபர்களையும் மினோடார் அரக்கன் கிழித்துக் கொன்றுவிடுவான்.

ஒரு வசந்த காலம். மீனாஸ் மன்னரிடமிருந்து கப்பம் வசூலிக்கும் தூதுவன் வந்து விட்டான். தீஸியஸ் இந்தக் கொடிய பழக்கத்துக்கு ஒருமுடிவு கட்டத் தீர்மானித்தான். தன் நாட்டு மக்களை இரக்கமின்றிக் கொல்லும் அந்தக் குரூரமான அரக்கனையும் ஒழித்துவிடுவதென்று உறுதி கொண்டான். மறு நாள் பலிப் பொருள்களுடன் பிரயாணம் செய்வதற்கு தங்கூரமிடப் பட்டிருந்த கறுப்புப் பாய்மரக் கப்பலில் அவர்களுடன் தானும் பிரயாணப் பட்டுப் போவதாகத் தந்தை ஆகியஸிடம் தெரிவித்தான். ''மினோடார் மிருகத்தைக் கொல்லாமல் திரும்பமாட்டேன்'' என்றான் தீஸியஸ்.

''மகனே ! மினோடாரை உன்னால் எப்படி மாய்க்க முடியும்? லாபரிந்தி

னுள்ளே உன்னைத் தள்ளுவதற்கு முன் பாக உன்னிடமிருந்து உன் வாளையும் கேடயத்தையும் பறித்துக்கொண்டுவிடு வார்களே. நிராயுதபாணியான நீ அந்தக் கொடிய காளை அரக்கனை எப்படிக் கொல்லுவாய்?'' என்றார் அகியஸ்.

''அந்தச் சுழல் மர்மப் பாதையின் கீழே கற்கள் இருக்காதா? என் உறுதியான பற்களும் முஷ்டியும் எங்கே போயின?'' என்று கேட்டான் தீஸியஸ். மகனிடம் மன்றாடிப் பயனில்லை, அவன் முடிவை மாற்றிக் கொள்ள மாட்டான் என்பதை அறிந்த அகியஸ் கண்களில்



நீர் வழிய மகனுக்கு அனுமதியளித்துக் கூறினான். ''மினோடாரை நீ வெற்றி கொள்ளுவாயானால் — ஆனால் அது இயலாத காரியம் — நீ திரும்பும் போது உன் கப்பலின் கறுப்புப் பாய்மரத் துணியைக் கீழே இறக்கி அதற்குப் பதில் வெள்ளைத் துணியை உயர்த்தியபடி வர வேண்டும். நான் மலை உச்சியிலிருந்து பார்த்துக் கொண்டே யிருப்பேன். வெள்ளைப் பாய்மரங்களைக் கண்டால் என் மகன் உயிரோடு திரும்புகிறான் என்று மகிழ்ந்து போவேன்.''

தந்தையின் இந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு நகரின் சந்தைப் பகுதிக்குக் கிளம்பினான் தீஸியஸ். அங்கு மினோஸ் மன்னனின் தூதுவன் கப்பப் பொருளான வாலிபர்களையும் கன்னிகைகளையும் தேர்ந்தெடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தான். கறுப்புப் பாய்மரக் கப்பல் பிரயாணத்துக்குத் தயாராகத் துறைமுகத்தில் நின்று கொண்டிருந்தது. குலுக்குச் சீட்டில் விதி விளையாடுவதைக் கண்டு கூடியிருந்த கூட்டத்திலிருந்து விம்மலும், வேதனை கலந்த குமுறலோடுகூடிய அழுகையும் வெடித்துக் கொண்டிருந்தன. தீஸியஸ் அந்தப் பரிதாபமான கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே புகுந்தான்.

''சீட்டுக் குலுக்கும் தொல்லை வேண்டாம். இதோ உங்களுக்கு வேண்டிய ஏழு இளைஞர்களில் ஒருவனாக என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்றான்.

''வாலிபனே, உன் பிரயாணம் எங்கே, எப்படிப்பட்டதென்று தெரியுமா?'' என்று கேட்டான் தூதுவன்.

''தெரியும். கடற்கரையில் எங்களுடைய வாழ்வை முடிக்கக் காத்திருக்கும் கப்பலுக்குப் போகலாம், வாருங்கள்'' என்று கூறிக் கம்பீரமாக முன்னால் நடந்தான் தீஸியஸ். அவனைத் தொடர்ந்து பலிப் பொருளான ஆறு யுவர்களும் ஏழு யுவதிகளும் நடந்தார்கள். மக்கள் கதறி அழுதபடி பின் தொடர்ந்தார்கள். போகும்போது தீஸியஸ் தன் சக யுவர்களிடம், ''அந்த அரக்கன் சாகா வரம் பெற்ற சிரஞ்சீவியல்ல'' என்றான். இது அவர்களுக்குச் சற்றே இதமாக இருந்தாலும் பொங்கி வரும் வேதனையைப் போக்க முடியவில்லை. அகியன் கடலே கண்ணீர் வடித்தது. கரும் பாய்மரங்களை அவிழ்த்துவிட்டார்கள் மாலுமிகள். சாவை நோக்கி அந்தக் கப்பல் பிரயாணப்பட்டது.

அகியன் கடலிலுள்ள தீவுகளையெல்லாம் வென்ற மாமன்னன் மினஸின் அரண்மனைக்குக் கொண்டுவரப்பட்டார்கள் கப்பப் பொருளான யுவர்களும் யுவதிகளும். மன்னன் மினஸ் தான் பலியிடப் போகும் அவர்களை நேருக்கு நேராகப் பார்த்தான். பிறகு, ''இவர்களைக் கொண்டு போய்ச் சிறையில் அடையுங்கள். பிறகு ஒவ்வொருவராகக் கொடிய காளை அரக்கனின் குகைக்குள் தள்ளுங்கள்'' என்று உத்தரவிட்டான்.

''மன்னனே!'' கம்பீரமாகக் குரல் உயர்த்திப் பேசினான் தீஸியஸ். ''அந்தக் கொடிய மிருகத்துக்குப் பலியாகும் முதல் நபராக என்னை அனுப்பச் சொல்லுங்கள். அதற்காகவே நானாக வலிய இந்தக் குழுவில் சேர்ந்திருக்கிறேன். சீட்டுக் குலுக்கிப் போட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டவனல்ல நான்.''

''வீர வாலிபனே, நீ யார்?''

''ஏதென்ஸ் நாட்டு மன்னன் அகியஸின் மைந்தன். இந்தக் குரூரமான செயலுக்கு ஒரு முடிவு காணவே வந்திருக்கிறேன்.''

சில விநாடிகள் மௌனமாகத் தீஸியஸையே பார்த்துக் கொண்டிருந்த மினஸ் பிறகு தணிந்த குரலில், ''இளைஞனே! பேசாமல் திரும்பிப் போ. இத்தனை அழகும் வீரமுமான ஒருவன் இறப்பது பரிதாபமாகும்'' என்றான்.

''அந்தக் கொடிய அரக்கனை நேருக்கு நேர் சந்திக்காமல் திரும்புவதில்லை என்ற சபதத்துடன் இங்கு வந்திருக்கிறேன் நான். கோழையைப் போல் திரும்பிச் செல்ல மாட்டேன்'' என்றான் தீஸியஸ்.

மினஸின் முகம் கடுமையாயிற்று. ''ஓ! அப்படியா? இந்தப் பைத்தியக்காரனை இழுத்துச் செல்லுங்கள்'' என்று கர்ஜித்தான். தீஸியஸும் மற்றவர்களோடு சிறையில் அடைக்க இழுத்துச் செல்லப்பட்டான்.

மினஸின் மகள் அரியத்னீ, (Ariadne) தன் தந்தைக்கும் தீஸியஸுக்கும் நடந்த உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்தாள். அவனுடைய அழகிலும், தைரியத்திலும் கம்பீரத்திலும் தன் மனத்தைப் பறிகொடுத்தாள். ''இத்தகைய ஓர் இளைஞன் இறப்பது அவமானம்'' என்ற முடிவுடன் சிறைச்சாலைக்குப் போனாள். தீஸியஸைச் சந்தித்துத் தன் உள்ளத்தைத் திறந்து பேசினாள்.

''நான் காவல்காரர்களைச் சரிக்கட்டி இருக்கிறேன். நீயும் உன் சகாக்களும் இப்போதே உங்கள் கப்பலுக்கு ஓடி விடுங்கள். அங்கிருந்து கிரீஸ் நாட்டுக்குத் தப்பி விடலாம். என்னையும் உன்னோடு அழைத்துப் போய்விடு. இங்கிருந்து நீ போன பிறகு நான் இங்கு உயிருடன் இருக்க முடியாது. நீங்கள் தப்புவதற்கு உதவியதற்காக என்னை என் தந்தை குரூரமாகக் கொன்று விடுவார்'' என்றாள் அழகி அரியத்னீ.

தீஸியஸ் சில போது மௌனமாக அவள் அழகைக் கண்டு வியந்தவனாக நின்றான். பிறகு, அமைதியாக ''நான் வீடு திரும்ப முடியாது. மினோடார் அரக்கனைச் சந்திக்காமல் நான் திரும்பப் போவதும் இல்லை. என் நாட்டு யுவதிகளையும் யுவர்களையும் இத்தனை ஆண்டுகளாகப் பலி கொண்டு வரும் இந்தக் கொடுமைக்குப் பழி வாங்கத்தான் போகிறேன். என் நாட்டு மக்களின் உள்ளத்திலே இடம் பெற்றுள்ள இந்தப் பீதியைக் களைந்தெறியாமல் திரும்பமாட்டேன்'' என்றான்.

''மினோடாரைக் கொல்லப் போகிறாயா, எப்படி?''

''எப்படி என்பது எனக்குத் தெரியாது.' என்னைவிடப் பல மடங்கு பலம் பொருந்தியவனாக இருக்கலாம் அந்த அரக்கன். அதற்காக நான் கலங்கவில்லை. எப்படியும் அவனை எதிர்த்தே தீருவேன்.''

தீஸியஸின் அஞ்சா நெஞ்சம் கண்டு அவன் மீது ஏற்பட்ட காதல் அரியத்னீயிடம் பன்மடங்கு பெருகியது.

''அந்த அரக்கனைக் கொன்ற பிறகு அந்த மர்மச் சுழல் பாதைகளைக் கொண்ட லாபரிந்திலிருந்து எப்படி வெளியேறுவாய்?'' என்று கேட்டாள் அவள்.

''அதுவும் எனக்குத் தெரியாது. அது ஒரு விநோதமான குகைப் பாதை

'ஆட்டர்' என்பது எனக்குப் பேர் — 'கூல்'
'வாட்டர்' கண்டால் மிகமிக ஜோர்
'நீட்'டாய் உள்ளே பாய்ந்திடுவேன் — அதில்
'ஸ்கேட்டிங்' கூடச் செய்திடுவேன்

—வண்ணப்படம்: ஆர். பி. எஸ். மணி



என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த அரக்கனின் உடலைப் புசித்து முடிப்பதற்குள் அந்த மர்மப் பாதையின் சரியான வழியைக் கண்டுபிடித்துவிட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது'' என்றான் தீஸியஸ்.

''அழகனே! நீ திறம் மிக்கவன். பெண்ணானாலும் என்னால் உனக்கு உதவ முடியுமென்று நம்புகிறேன். உனக்கு ஒரு கத்தி தருகிறேன். அதன் உதவியால் நீ ஒருவேளை அந்த அரக்கனைக் கொல்லவும் கூடும். இதோ ஒரு நூல் பந்து. இதன் உதவியால் லாபிரிந்திலிருந்து வெளியேறும் வழியையும் ஒருவேளை நீ அறிந்து கொள்ளலாம். ஆனால் நீ எனக்கு ஒரே ஒரு வாக்குறுதி மட்டும் அளிக்க வேண்டும். மினோடாரைக் கொன்று சுழல் குகையிலிருந்தும் நல்லபடியாக வெளியேறித் தப்புவாயானால் உன்னோடு என்னையும் கிரீஸ் தேசத்துக்கு அழைத்துப் போக வேண்டும். என் செயலை என் தகப்பனார் அறிவாரானால் என்னை உயிரோடு வைக்க மாட்டார்.'' என்று மன்றாடினாள் மினோவின் மகள்.

தீஸியஸ் சிரித்தபடியே அவள் அளித்த கத்தியைத் தன் வயிற்றினடியில் ஒளித்துக் கொண்டான். ''இப்போது நான் மிக்கப் பாதுகாப்புடன் உள்ளேன்'' என்றபடியே நூல் கயிற்றுப் பந்தையும் பத்திரப் படுத்திக் கொண்டான். வெற்றியோடு திரும்பினால் உன்னைக் கைவிட மாட்டேன்'' என்று வாக்களித்து அவள் முன் மண்டியிட்டு அவள் கைகளை எடுத்து முத்தமிட்டான். அவள் கண்ணீரினால் அவன் தலை நனைந்தது. பிரியா விடை கொண்டாள் மினோவின் மகள். தீஸியஸ் அமைதியாகத் தூங்கினான்.

மாலைப் பொழுதில் சிறைச்சாலைக் காவலர்கள் தீஸியஸை இழுத்துக் கொண்டு போய் லாபிரிந்தில் தள்ளினார்கள்.

இருள் சூழ்ந்து மர்மங்களும், பயங்கரங்களும் நிறைந்த சுழல் பாதையில் முன்னேறினான் தீஸியஸ். பாதை வளைந்து வளைந்து சென்றது மலைகளுக்கிடையே. குகைகள் வழியாகவும், இரு மலைகளுக்கிடையேயும், பரந்த வெளியிலும், பாறைகள் சரிந்து, விழுந்து கொண்டிருக்கும் பகுதிகளிலும் பாதை போய்க் கொண்டிருந்தது. இடப்புறமாகவும், வலப் பக்கமாகவும் மேலும் கீழும் ஏறியும் இறங்கியும் நடந்து கொண்டே இருந்தான் தீஸியஸ். முடிவற்ற பாதை. அவன் தலை சுற்றியது. ஆனால் இத்தனை நேரமும் அரியத்னீ அளித்த நூல் பந்தைப் பாதையின் ஆரம்பத்தில் அதன் முனையை ஒரு பாறையிலே பிணைத்துவிட்டு நூலைப் பிரித்து விட்டுக் கொண்டே நடந்துகொண்டிருந்தான். நெடிதுயர்ந்து நின்ற இரு கரும் பாறைகளுக்கிடையே காளைமுக அரக்கனை அவன் சந்திக்கும் வரையிலும் அந்த நூல் பந்தின் கயிற்றை கவனமாக அவிழ்த்து விட்டுக் கொண்டு வந்தான்.

அரக்கனை நேருக்கு நேராகச் சந்தித்த தீஸியஸ் சில கணம் பிரமித்துப் போய் விட்டான். அத்தகையதோர் அதிசய மிருகத்தை அவன் அதுவரை கண்டதே இல்லை. மனித உடல், காளையின் தலை, மனிதக் கைகள், காளையின் கால்கள், சிங்கத்தின் பற்கள். அதனால் தனது இரையைக் கிழித்துக் குதறுவான் அவன். தீஸியஸைக் கண்ட அந்த அரக்கன் சினங் கொண்ட காளையாக அவன் மீது பாய்ந்தான்.

தீஸியஸ் லாகவமாகச் சட்டென்று ஒதுங்கிக் கொண்டு அதே சமயம் காளை அரக்கனின் முழங்கால்களிலே தன்னிடமிருந்த வாளினால் தாக்கினான். குறுகலான பாதையிலே அவன் பின்னால் துரத்திச் சென்று மேலும் மேலும் தன் வாளினால் அவனைக் குத்தினான். பின்பக்கத்திலிருந்தபடி. இதுவரை இப்படி எவராலும் தாக்கப் படாததனால் வெகுண்ட மினோடர் வெறி கொண்டு கர்ஜித்தபடி ஓடினான், ஓலமிட்டான். தீஸியஸ் இடக் கரத்தால் நூல் பந்தை அவிழ்த்து விட்டுக்கொண்டே

வாடா மலர்

பிறர் சொல்வதற்குக் காது கொடுத்துக் கேட்கவும் கீழ்ப்படியவும் முதலில் கற்றுக்கொள். அப்போது தான் பிற்காலத்தில் சாமர்த்தியமாக உத்திரவிடவும் விருப்பப்படி பிறரை ஆட்டி வைக்கவும் உன்னால் முடியும்.

— வில்லியம் போட்கர்



செயல்புரியாத மனிதனுக்குத் தெய்வம் ஒருபோதும் உதவாது.

—ஸாபாகிளிஸ்

தொடர்ந்து ஓடி வாளினால் காளை அரக்கனைச் சாடிக் கொண்டே இருந்தான்.

குகைக்குள் குகையாக, இருள் சூழ்ந்த மலைப் பாதை வழியாகக் கரடு முரடான பாறைகள் மீதாக அடித்துச் சொரியும் நீர்வீழ்ச்சிகளினூடே, சூரிய ஒளியியே கண்டிராத கருங் குகைகளினுள்ளாக, உருகாத பனி மூடிய பகுதிகளின் மீதாக — வேட்டையாடப் படுபவனும் வேட்டையாடுபவனும் ஓடினார்கள். மினோடாரின் மரண ஓலம் அந்தப் பிராந்தியம் எங்கும் எதிரொலித்தது.

ஓடி ஓடிக் களைத்தது மினோடார். தீஸியஸின் வாளினால் உடலெங்கும் துளைக்கப்பட்ட நிலையில் பெருமூச்சும் ரத்தப் பெருக்கும் அதிகமாயின. வாயில் நுரை கக்கக் காளையின் மூக்கிலிருந்து உயிர் மூச்சாகப் புகை கருண்டெழ நிற்கும் அந்த அரக்கனின் கொம்புகளைப் பிடித்துக் கொண்டு தன் பலத்தை யெல்லாம் ஒன்று திரட்டித் தன் வாளை அதன் நெஞ்சிலே பாய்ச்சினான் தீஸியஸ். பயங்கரமான ஊளையுடன் காளை அரக்கன் தரையில் விழுந்து மடிந்தான்.

களைப்பினால் சற்றே பாறையின் மீது கண் மூடிக் கிடந்த தீஸியஸ் தொடர்ந்து அவிழ்த்து விட்டுக் கொண்டு வந்த நூலைப் பிடித்துக் கொண்டு வந்த வழியே திரும்பி அந்த மர்மப் பாதையின் நுழை வாயிலுக்கு வந்தான். அங்கே அவனுக்காக அவன் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தாள் அழகி அரியத்னீ.

''எல்லாம் முடிந்தது'' என்ற தீஸியஸ் அவளிடம் ரத்தம் தோய்ந்த வாளைக் காட்டினான். அவள் தன் விரலைத் தன் உதட்டின் மீது வைத்துச் சத்தமிடாதிருக்கும்படி சமிக்ஞை செய்தாள். அவனைச் சிறைச்சாலைக்கு அழைத்துப் போனாள். அதன் கதவுகளை அகலத் திறந்து விட்டாள். காவலர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்கள். அவர்களுக்கு மதுவைக் கொடுத்து மயங்க வைத்தவள் இந்த மங்கைநல்லாள்தான். பலிக்காகச் சிறையிலிருந்த எல்லோரையும் விடுதலை செய்து கொண்டு எல்லோருமாகக் கப்பலை நோக்கி ஓடினார்கள். ஓசையின்றிக் கப்பலின் திரைச் சீலையை அவிழ்த்து விட்டார்கள். மினோஸின் கப்பல்களினூடே தீஸியஸின் கப்பல் மெள்ள மெள்ளக் கடலினுள் புகுந்தது. இருள் இவர்களின் செயலுக்கு உதவியாக இருந்தது.

நாக்ஸாஸ் என்னும் இடத்துக்கு எல்லாரும் பத்திரமாக வந்து சேர்ந்தார்கள். அங்கு தீஸியஸின் மனைவியானாள் அரியத்னீ. தன்னுடைய அவலத்தினாலோ அவசரத்தினாலோ தீஸியஸ் தன் கப்பலில் பாய் மரங்களின் திரைச் சீலையை வெள்ளைத் துணிகளாக மாற்றியமைக்க மறந்து போனான்.

அகியஸ் — தீஸியஸின் தகப்பனார்— தன் மகனின் கப்பலை எதிர்பார்த்துக் கடலையே பார்த்துக் கொண்டு மலை உச்சியில் உட்கார்ந்திருந்தார். வயோதிகத்தினால் தளர்ந்த அவரது கண்கள் காத்திருந்து பூத்துப் போயின. கடைசியாக ஒரு நாள் கப்பல் கண்ணுக்குத் தட்டுப்பட்டது. ஆனால் அந்தோ! அதன் பாய்மரங்கள் துக்கத்தின் அடையாளமாகக் கறுப்பாகக் காட்சியளித்தன. தன் மகன் பலியானான் என்ற வேதனையினால் மனமிடிந்த மன்னன் கடலில் விழுந்து தன் உயிரைப் போக்கிக் கொண்டான்.

தீஸியஸ் ஏதென்ஸின் மன்னனானான். மக்களின் மகிழ்ச்சியே தன் மகிழ்ச்சியாக நீண்ட காலம் நல்லாட்சி நடத்தினான்.



அண்ணனும் தம்பியும்

எஸ். ஷியாமளா

"கோபு... கோபு... இந்தக் கணக்கைக் கொஞ்சம் சொல்லிக் கொடுடா. சரியாக வரலே."

கெஞ்சுதலாக அண்ணனிடம் வந்து நின்றான பாபு. அவன் கையில் கணக்கு நோட்டும் பென்சிலும் இருந்தன.

"போடா போ. வேறு வேலையில்லே. என்னால் முடியாது போ" என்று சிடுசிடுத்தான் கோபு.

"கோபு... இது ஒரே ஒரு கணக்குத் தாண்டா..." என்று பாபு கெஞ்சினான்.

"முடியாதுன்னு ஏண்டா இப்படிப் பிடுங்கி எடுக்கறே?" கொஞ்சமும் இரக்கமின்றி அதட்டினான் கோபு.

பாபு மௌனமாகத் தன் மேஜை அருகில் போய் உட்கார்ந்து கொண்டான். வழக்கமாக எப்பவும் நடக்கும் நிகழ்ச்சிதான் அது.

கோபு எட்டாவது படிக்கும் மாணவன். அவன் தம்பி பாபு ஏழாவது படிக்கிறான். இருவரும் படிப்பில் கெட்டிக்காரர்கள். ஆனால் பாபுவுக்குக் கணக்கில் மட்டும் அத்தனை தேர்ச்சி இல்லை. படிப்பில் மட்டுமல்லாது விளையாட்டுக்களிலும் இருவரும் கெட்டிக்காரர்கள். விளையாட்டில் கோபு முதலாவதாகவும் பாபு இரண்டாவதாகவும் வருவார்கள். பள்ளியில் உபாத்தியாயர்களும் மாணவர்களும் கோபுவையும் பாபுவையும் ரொம்பக் கொண்டாடுவார்கள். கோபு மகிழ்ந்து போவான். அதனால் அவனுக்குக் கர்வம் அதிகரித்தது. ஆனால் பாபு இயற்கையிலேயே சாந்த குணம் உள்ளவன். அடக்கத்தோடு நடந்து கொள்வான். கோபு பாபுவை எப்பவும் மட்டம் தட்டியே பேசுவான்.

"ஏண்டா பாபு! உங்க அண்ணன் தானே கோபு, ஏண்டா எப்பவும் உன்னை மிரட்டுகிறான், வைகிறான், கேலி பண்ணுகிறான். நீ ஏண்டா பேசாமல் இருக்கிறாய்?" என்பான் தோழன் மோகன்.

"அண்ணன் தானே, கேலி பண்ணினால் என்ன தப்பு?" என்பான் பாபு.

அவனுடைய அப்பாவித்தனமான பேச்சைக் கேட்டு நண்பர்கள் சிரித்தாலும் மனத்துக்குள் பாபுவின் நல்ல குணத்தை மெச்சுவார்கள். கோபுவிடம் அவர்களுக்குச் சிறிது மதிப்புக் குறைந்தது. ஆனாலும் வெளிக்காட்ட மாட்டார்கள்.

பள்ளிக் கூடத்தில் விளையாட்டுப் போட்டிகள் மறு வாரத்தில் நடக்கப் போவதைத் தலைமை ஆசிரியர் அறிவித்தார். போட்டியில் சேர விரும்பும் மாணவர்கள் இரண்டு நாட்களுக்குள் பெயர்களைத் தெரிவிக்க வேண்டும் என்றும் கூறினார். மாணவர்கள் உற்சாகமாக ஆரவாரம் செய்தார்கள். கோபு அந்த நிமிஷமே முதல் பரிசு வாங்கி விட்டவன் போல, "ஏண்டா நீங்க எல்லாம் தவளை மாதிரி தாவித் தாவிக் குதிக்கிறீங்க? எல்லா விளையாட்டிலும் நான்தான் முதல் பரிசு வாங்கப் போகிறேன்" என்றான் கர்வமாக. மற்ற மாணவர்கள் முகம் சுருங்கியது. மனத்துக்குள் ஏதேதோ முணு முணுத்துக் கொண்டார்கள்.

மறு நாள் காலை பள்ளிக்கூடத்துக்குள் பரபரப்புடன் நுழைந்த மோகன், நண்பர்களிடம், "அடே சீனு! ரங்கு! நம்ப கோபுவுக்கு நேற்று சாயந்திரம் 'ஆக்ஸிடெண்ட்' ஆகி ஆஸ்பத்திரியில் இருக்காண்டா..." என்றான்.

சில நிமிஷங்களில் விஷயம் தீப்போல் பள்ளி முழுவதும் பரவிவிட்டது. முதல் நாள் மாலை வெகு சந்தோஷத்துடன் சீட்டி அடித்தபடி தெருவில் சைக்கிளில் போய்க் கொண்டிருந்த கோபு தெரு முனை திரும்பும்போது எதிரில் வெகு வேகமாக வந்த லாரி மோதித் தூக்கி எறியப்பட்டான். நல்ல வேளையாக லாரி அடியில் அகப்படாமல் உயிர் தப்பியது கடவுள் செயல் என்று எல்லோரும் பேசிக் கொண்டார்கள்.

கோபுவின் தந்தை ராமநாதன் உடனே மகனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றார். நினைவிழந்து கிடந்த அண்ணனைக் கண்டு பாபு விம்மி விம்மி அழுதபடி அன்னையின் அருகில் நின்றான். டாக்டர் கோபுவைப் பரிசோதித்துக் காயங்களுக்குக் கட்டுப் போட்டு உள்ளுக்கும் மருந்து கொடுத்தார்.

"ஒன்றும் பயமில்லை, மிஸ்டர் ராமநாதன்! விழுந்த அதிர்ச்சியில் மயக்கம்தான். உயிருக்கு ஆபத்தில்லை. கால்களில் பலமான காயம் பட்டிருக்கிறது. அதனால் எக்ஸ்ரே எடுக்க வேண்டும். எலும்பு முறிவு ஏதாவது இருந்தாலும் குணப்படுத்திவிடலாம். ஒரு மாதமாவது 'பெட்'டில் இருக்கணும். கவலைப்படாதீர்கள்..." என்றார் டாக்டர்.

கோபுவுக்கு எலும்பு முறிவு எதுவும் இல்லை என்று டாக்டர் திட்டவட்ட

மாகக் கூறியபிறகுதான் வீட்டில் எல்லாருக்கும் நிம்மதி ஏற்பட்டது. பாபுவும் தெளிந்த முகத்துடன் பள்ளிக்கூடம் போனான். கோபு இரண்டு வாரங்கள் கண்டிப்பாக, ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டும் என்று கூறினார் டாக்டர்.

ஒரு நாள் கோபுவின் நண்பர்கள் முத்துவும் சீனுவும் கோபுவைப் பார்க்க ஆஸ்பத்திரிக்கு வந்தார்கள். கோபு அப்போது 'பாத்ரூமுக்'குச் சென்றிருந்தான். முத்துவும் சீனுவும் வராந்தாவில் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

''சீனு! இந்த வருஷம் விளையாட்டுப் போட்டியில் பாபுதான் முதலில் பரிசு வாங்குவான், இல்லையா?''

''இல்லேடா, இல்லே! பாபு விளையாட்டுப் போட்டியின் சேரவே போகிறதில்லே.....''

''ஏன், சீனு. ஏன்? எப்பவும் கோபு முதல் பரிசு வாங்குவான். இந்தத் தடவை பாபு வாங்கட்டும் என்றுதான் கடவுள் கோபுவுக்குத் தண்டனை கொடுத்திருக்கார்ன்னு மோகன் ரங்கு எல்லோரும் பேசிக் கொள்ளுகிறார்களே'' என்று முத்து கூறினான்.

''ஆசிரியர்கூட, 'பாபு! நீதான் இந்த ஆண்டு பரிசு வாங்கப் போகிறாய்' என்றார். ஆனால்... பாபு போட்டியில் சேரவேமாட்டேன் என்று பிடிவாதமாகச் சொல்லிட்டானே....''

''ஏண்டா அப்படி?'' முத்து வியப்போடு வினவினான்.

''பாபு ஆசிரியரிடம் சொன்னான். சார்! என் அண்ணா ரொம்ப ஆசையோடு இருந்தான். அவனுக்குச்

அரண்மனைக்காரனா?

சென்னை நகரில் ஹைகோர்ட் எதிரில் அரண்மனைக்காரத் தெரு' என்று ஒரு தெரு இருக்கிறதல்லவா? இதை ஆங்கிலத்தில் குறிப்பிடும்போது, 'ஆர்மீனியன் ஸ்ட்ரீட்' என்று அழைக்கிறோம். 'அரண்மனைக்காரன்' எப்படி 'ஆர்மீனியன்' ஆனான்? 'அரண்மனை' என்பதற்கு ஆங்கிலத்தில் 'பேலஸ்' (Palace) என்று பெயர். ஆர்மீனியாவைச் சேர்ந்தவரைத்தான் ஆர்மீனியன்' என்று அழைக்கிறோம்.

சமீபத்தில் இரண்டு ஆர்மீனியர்கள் சென்னைக்கு வந்திருந்தபோது, இந்தத் தெருவில் ரொம்ப நாட்கள் பழகியவர்கள் போல் சர்வ சாதாரணமாக நடந்து கொண்டிருந்தனர். அவர்கள் சென்னை நகரைப் புதியதாகப் பார்ப்பவர்கள் போலக் காணப்படவில்லை. தெரு ஆரம்பத்தில் உள்ள தேவாலயத்துக்குள் ரோஜா மாலையுடன் அவர்களும் நுழைந்து வணங்கி வந்தனர். சென்னை நகரத்தைத் தங்கள் சொந்த நகரம் என்று இவ்விருவரும் பெருமையோடு ஆங்கிலத்தில் கூறிக் கொண்டிருப்பதைக் கண்டு, விவரங்கள் கேட்டறிய ஆவல் பிறந்தது எனக்கு.

அரண்மனைக்காரத் தெருவில் உள்ள மாதா கோவில் வாசலில் நின்றபடி அரை குறை ஆங்கிலத்தில் எனக்குப் பதில் சொன்னார்கள்.

இவர்கள் பெயர் ஜார்ஜ் புருடியன், நோரன்ஸ் என்பதாகும். இந்த இரு ஆர்மீனியர்களும் இப்போது ரஷ்யப் பிரஜைகளாக இருந்து வருகின்றனர்.



சாதாரண ஜுரம் ஏதாவது வந்திருந்தால்கூடப் பரவாயில்லே. இரண்டு கால்களிலும் அடிபட்டு நடக்கக்கூட முடியாமல் படுத்துக் கொண்டிருக்கிறன். இப்ப நான் விளையாடி முதல் பரிசு வாங்கிஞல் கோபு மனசு எத்தனை வேதனைப்படும்? சார்! எனக்கும் உண்மையாக சந்தோஷம் உண்டாகாது. அவனோடு சேர்ந்து விளையாடி நான் ஜெயித்தால்தான் உண்மையாகச் சந்தோஷப்படலாம். கோபு இல்லாத சந்தர்ப்பத்தை நான் பயன்படுத்திக் கொள்ள மாட்டேன் சார்! கோபுவுக்குக் கிடைக்க வேண்டிய பரிசை நான் வாங்கிக் கொண்டு அவன் எதிரில் எப்படி சார் நிற்பேன்?' அப்படின்னுன். அழுதே விட்டாண்டா முத்து! ஆசிரியர்கூடப் பிரமித்துப் போயிட்டார்டா...''

''அப்படியா சீனு! பாபு மாதிரி ஒரு தம்பி கிடைப்பதற்குக் கோபு ரொம்ப அதிர்ஷ்டசாலிடா!''

அவர்கள் பேசுவதைப் பின்னல் நின்று கேட்டுக் கொண்டிருந்த கோபு மெதுவாகத் தன் படுக்கையில் போய்ப் படுத்துக் கொண்டான். தங்கள் பேச்சிலேயே லயித்திருந்த நண்பர்கள் கோபு வந்ததைக் கவனிக்கவேயில்லே.

''பாபு...., பாபு. நான் நிஜமாகவே அதிர்ஷ்டசாலிடா... இனி மேல் உனக்குக் கணக்குப் பாடம் எல்லாம் சொல்லிக் கொடுத்து உன்னை முதலாவதாக வரச் செய்வேண்டா, தம்பி! என்னை மன்னிச்சுடுடா...'' மனத்துள் தம்பியிடம் பேசியபடி கண்களில் நீர் வழியப் படுத்திருந்தான் கோபு.

ஆர்மீனியரு?

முதன் முதலாக ஆர்மீனியப் பத்திரிகை ஒன்று 1794ஆம் வருஷம் பிரசுரிக்கப்பட்டதாம். அந்தப் பத்திரிகை சென்னையில் தான் பிரசுரிக்கப்பட்டதாம். ஆர்மீனியாவில் அல்ல என்று அவர்கள் பெருமையோடு கூறினர்.

புருடியன், ''இதை ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பொக்கிஷமாகவே ஆர்மீனியர்களான நாங்கள் பாதுகாத்து வருகிறேம்'' என்கிறர் பெருமையுடன்.

தொடர்ந்து புருடியன், ''ஆர்மீனிய மொழியில் பல நூல்கள் சென்னையில் பிரசுரமாகியிருப்பது பழைய ரிகார்டுகளில், செயின்ட் ஜார்ஜ் கோட்டை லைப்ரரியில் இருக்கிறதே. தெரியுமா?'' என்று கேட்கிறர்.


''நீங்கள் தற்போது எதற்காகச் சென்னைக்கு வந்திருக்கிறீர்கள்?'' என்ற கேள்விக்கு அவர்கள் கூறும் பதில்:

''சென்னையில் வசித்து வரும் இரண்டே இரண்டு ஆர்மீனியக் குடும்பங்களைச் சந்தித்து மகிழ்ச்சியோடு உரையாடவே வந்திருக்கிறேம். 1768 வரை நூற்றுக்கணக்கான ஆர்மீனியக் குடும்பங்கள் சென்னை நகரில் குறிப்பாக ஜார்ஜ் டவுன் அமைந்துள்ள பகுதியில் வாழ்ந்து வந்திருக்கின்றன. இன்று கூட பம்பாயிலும் கல்கத்தாவிலும் ஆயிரக்கணக்கான ஆர்மீனியக் கிளப்புகள், கோயில்கள் உள்ளன. இவற்றை ஆர்மீனியக் குடும்பங்கள் நிர்வகித்து வருகின்றன. நாங்கள் சென்னைக்கு வருவதை அதுவும் எங்கள் முன்னேர்கள் வாழ்ந்த இந்தத் தெருவுக்கு வருவதில் எவ்வளவு மகிழ்ச்சி அடைகிறேம், தெரியுமா?''

இப்போது என்ன நினைக்கத் தோன்றுகிறது? ஆர்மீனியன் தெரு என்று அழைக்கலாமா? அரண்மனைக்காரத் தெரு என்று அழைக்கலாமா? எப்படி அழைக்கலாம், சொல்லுங்கள்?




அஹி, மஹி ராவணர்கள் கோயில் சாளரத்தின் வழியே இடம் இடமாகத் தேனையும் மலை மலையாகப் பழங்களையும் உள்ளே அனுப்புகிறார்கள் பிறகு.....
தாயே! நீ விரும்பியபடியே நர பலியோடு வந்திருக்கிறோம்.
கதவைச் சற்றே திறந்து அவர்களை உள்ளே அனுப்பி விட்டு நீங்கள் வெளியே போயிருங்கள்.
மாருதி ராமலட்சுமணர்களைத் தொட்டதும், கட்டி இருந்த அசுரமாயை விலகி நினைவு பெறுகின்றனர்.
பிரபுவே! தாங்கள் எங்களை சோகத்திலாழ்த்தி இப்படி விளையாடலாமா?
பிரபோ! இனி யுத்தம் தானே?
அதிலென்ன சந்தேகம்! உன் மீது ஏறி இங்கிருந்து தப்பிச் செல்ல மாட்டோம். யுத்தமே செய்வோம்.
ராமலட்சுமணர் வில்லை டங்காரம் செய்ய அநுமான் ஆலய வாயிலை அகலத் திறக்க....
ஆஹா! மோசம் போனோம். ஆனால் இந்த இருவரால் நம்மை என்ன செய்ய முடியும்?
மூவரில்லை அப்பனே! நால்வர். நானும் அவர்கள் பக்கமே!
பெரும் போர் மூண்டது. அரக்கர் படை ஹதாஹதம் செய்யப்பட்டது. ஆனால் அஹி மஹி ராவணர்களின் சிரங்கள் அறுபட்ட மறுபடி முளைத்துக் கொண்டே இருந்தன.


மகரத்துவஜா, இதென்ன விந்தை?
எனக்கும் புரியவில்லை. இவர்களுடைய உயிர் நிலை வேறு எங்கோ உள்ளது போலும்.
நந்த வனத்தில் இரு பெரிய வண்டுகள் உள்ளன. அவைகளைக் கொன்றால் அவ்விருவரும் மடிவார்கள்.
ஜெய் ரகுவீர ..
இவன் மகரத்துவஜன்
அப்படியா?
தொடரும்



சுமி சொன்ன கதை

திருவாழத்தான்

"இன்னிக்குச் சுமி ஒரு கதை சொல்வாளாம்'' என்றான் அரவிந்தன்.

இரவு ஒன்பது மணி. சாப்பிட்டான பிறகு, அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, அரவிந்தன், பெரியப்பா, பெரியம்மா எல்லாரும் கூடி உட்கார்ந்திருந்தனர். நடுவே முழுங்கால் களைக் கட்டிக் கொண்டு சுமி உட்கார்ந் திருந்தாள்.

சுமிக்கு இரண்டரை வயது.

'' நான் கதை சொல்லமாத்தேன்'' என்றாள் சுமி.

''இதோ பாரு, நான் குருவிக் கதை சொன்னேன், இல்லையா ?'' என்றார் அப்பா.

'' நான் காக்கா கதை சொன் னேனே !'' என்றாள் அம்மா.

'' நான் நரிக் கதை சொன்னேன் !'' என்றான் அண்ணா.

''கத்திரிக்காய்க் கதை சொன்னேன் நான் !'' என்றான் அரவிந்தன்.

'' நான் ராமர் கதை சொன் னேன் !'' இது பெரியம்மா.

இந்தப் பேச்சுக்களையெல்லாம் கேட்டு சுமி நெளிந்தாள்.

'' ஒரே ஒரு கதை சொல்லும்மா !'' என்றார் பெரியப்பா கெஞ்சலுடன்.

''ம்... ஒண்ணே ஒண்ணு தான் சொல் லுவேன் !'' என்று தொடங்கினாள் சுமி.

''சரி, சரி. ஒரு கதை போதும்!'' என்றனர் அனைவரும்.

''ஒரே ஒரு ஊருலே ஒரே ஒரு குருவி யாம் !''

''இந்தக் கதை எனக்குத் தெரி யுமே!'' என்றான் அரவிந்தன்.

''அந்தக் குருவிக் கதை இல்லே இது. இது வேறே குருவி !'' என்றாள் சுமி.


''உஸ்.... எல்லாரும் பேசாமல் இருங்க. சுமிக் குட்டி கதை சொல்ற போது யாரும் மூச்சு விடக் கூடாது'' என்று அடக்கினாள் அம்மா.

சுமி மீண்டும் தொடங்கினாள். ''ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு குருவி யாம். அது குப்பையைக் குப்பையைத் தோண்டித்தாம் !''

''அதே கதைதான்!''

''உஸ்!'' யாரோ அதட்டினார்கள்.

''.....அந்தக் குப்பையிலே ஒரு காசு கிடந்ததாம்!''



ராமாயணப் புதிர்

ராமாயணக் கதை உங்கள் எல்லோருக்கும் தெரியும். அதில் எத்தனையோ முனிவர்கள் சம்பந் தப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் பத்து பேர் ராமாயணத்திலே புரிந்த செயல்கள் கீழே தரப் பட்டுள்ளன. அவற்றைக் கொண்டு அம்முனிவர் களின் பெயர்களைக் கண்டு பிடிக்க இதோ ஒரு சோதனை உங்களுக்கு.

விடையைத் திருப்பிப் பார்க்காமலேயே கண்டு பிடிக்க முயலுங்கள்.

1. தசரதச் சக்கரவர்த்திக்குப் புத்திரசந்தானம் உண்டாகப் புத்திர காமேஷ்டி யாகம் செய்து வைத்த முனிவர். 2. தசரத மன்னரின் குல குரு. 3. தான் செய்ய நினைத்த யாகத்தைக் காக்க, தசரதரிடமிருந்து ராமனைப் பெறக் கோரிய முனி வர். 4. தன் மனைவி கற்பை இழந்தாள் என்று அவளைக் கல்லாய்ச் சபித்தவர். 5. ஸ்ரீ ராமனை

''அதே......!''

பேசாதே! நீ சொல்லுடாக் கண்ணு'' அம்மா சுமியிடம் சொன்னாள்.

''ஒரே ஒரு ஊருலே.....!''

''அதெல்லாம் சரி. குருவி குப்பையைத் தோண்டித்து. அந்தக் குப்பையிலே ஒரு காசு கிடந்தது. அப்புறம் சொல்லு!'' என்றான் அண்ணா.

''அப்புறம்.... அந்தக் காசை எடுத்துக்கிட்டுக் குருவி கடைக்குப் போச்சு. போயி, கடைக்காரர்கிட்டே காசைக் கொடுத்து 'கடைக்காரே, கடைக்காரே, இந்தக் காசுக்குக் கொஞ்சம் அரிசி...!''

''ஐயோ, ஒரு காசுக்கு அரிசியா? படி அரிசி ஏழு ரூபா, நாப்பது பைசா விக்கறது!'' என்றார் பெரியப்பா.

''உங்க பொருளாதார ஞானத்தைக் குழந்தைகளிடம் காட்டவேணும். சும்மா இருங்க!'' என்றாள் பெரியம்மா பெரியப்பாவிடம்.

''நீ கதையைச் சொல்லுடாக் கண்ணு!'' என்றாள் மீண்டும் அம்மா சுமியிடம்.

''குருவி கடைக்காரர் கிட்டக் காசைக் கொடுத்து, 'கடைக்காரரே, கடைக்காரரே, இந்தக் காசுக்குக் கொஞ்சம் முந்திரிப் பருப்பு, கொஞ்சம் திராட்சைப் பழம், கொஞ்சம் ஏலக்காய்...!''

''இத்தனையும் அந்த ஒரு காசுக்கா?'' அக்கா கேட்டாள்.

''ஆமாம்!''

''ஒரு காசுக்கு இத்தனையும் எப்படிக் கிடைக்கும்?''

''அது பத்துப் பைசாவாக இருக்கும்!'' என்றார் பெரியப்பா.


''ஒரு ரூபாய்க்கே இத்தனை சாமான் கிடைக்குமா?'' அண்ணா கேட்டான்.

''ஒரு ரூபாய்ன்னு எங்கே சொன்னேன்? ஒரு காசுன்னுதானே சொன்னேன்!''

''ஒரு காசுக்கு அரிசி, வெல்லம், முந்திரிப் பருப்பு, திராட்சைப் பழம், ஏலக்காய் எல்லாம் கிடைக்குமா?''

''கிடைக்கும்!''

''எப்படி?''



அனைவரும் சுமியை வியப்போடு பார்த்தனர்.

''அது தங்கக் காசாக்கும் அந்தத் தங்கக் காசுக்கு இன்னும் எவ்வெவ்வளவோ கிடைக்குமாக்கும்!'' என்றாள் சுமி.

''ஓ...!'' என எல்லாரும் சுமியின் சாமர்த்தியமான பதிலைக் கேட்டுச் சிரிக்க, அவளை வாரி அணைத்துக் கொண்டாள் அம்மா.


சுமி சொன்ன கதையும் முடிந்தது; கத்தரிக்காயும் காய்த்தது!

மீண்டும் அயோத்திக்கு அழைத்து வந்து முடிசூட்ட உறுதிகொண்டு சித்திரகூடம் புறப்பட்ட பரதனுக்கும் பரிவாரங்களுக்கும் விருந்து வைத்து உபசரித்த முனிவர். 6. தண்டகவனத்திலே சீதாதேவிக்கு விசேஷ ஆபரணங்கள் தந்து ஆசிகூறிய அநுசூயையின் கணவர். 7. சபரியின் சிசுருஷைகளைப் பெற்ற மாமுனிவர். 8. போர்க்களத்திலே ராமனுக்கு வெற்றி ஏற்பட வேண்டி ஆதித்ய ஹ்ருதயம் என்ற ஸ்தோத்திரத்தை உபதேசம் செய்தவர். 9. இராமாயணத்தை இயற்றிய ஆதி கவி. 10. வனவாசத்தின்போது ஸ்ரீ ராமபிரானுக்கு உலகாயதம் உபதேசம் செய்த தசரத மன்னரின் அமைச்சர்களில் ஒருவர். - சரஸன்



விடை: (1) வசிஷ்டர். (2) ரிஷ்யசிருங்கர். (3) விஸ்வாமித்திரர். (4) கௌதமர். (5) பரத்வாஜர். (6) அத்ரி. (7) மதங்கர். (8) அகஸ்தியர். (9) வால்மீகி. (10) ஜாபாலி.

தெரியுமா?



1671. நயாகரா ஆற்றின் குறுக்கே அதன் நீர்வீழ்ச்சிக்கு மேலாக கயிற்றில் நடந்து சாகசம் புரிந்த ஃபிரெஞ்சுக்காரரின் பெயர் தெரியுமா?

1672. பாஞ்சஜன்யம், தேவதத்தம், பௌண்டரம், அனந்தவிஜயம், ஸுகோஷம், மணிபுஷ்பகம் — இவையெல்லாம் என்ன தெரியுமா?

1673. வடக்கு ஸ்காண்டிநேவியாவில் வாழும் மக்களின் பெயர் என்ன?

1674. பெனலக்ஸ் (Benelux) நாடுகள் என்று எதற்குப் பெயர்?

1675. ஸ்விட்ஜர்லாந்துக்கும் ஆஸ்திரியாவுக்குமிடையே ஒரு சின்னஞ்சிறிய நாடு உள்ளது. அதன் பெயர் என்ன?

1676. இன்றைய நயாசாலாந்துக்கு முந்தையப் பெயர் என்ன?

1677 மால்டா என்பது மூன்று தீவுகளின் கூட்டம். மற்றத்தீவுகளின் பெயர் என்ன?

1678. ஸ்விட்ஜர்லாந்தில் உள்ள ஆல்ப்ஸ் மலைப் பள்ளத்தாக்குகளில் சில போது கதகதப்பான காற்று வீசும். இதற்கு ஒரு பெயர் உண்டு. அது என்ன?

1679. முக்கோண வடிவில் ஒரு சங்கீதக் கருவியை ரஷ்யர்கள் பயன்படுத்துகிறார்கள். இதன் பெயர் என்ன?

1680. ஸ்காண்டிநேவியா நாடுகளில் பெரியது எது?

1681. க்ராகோவ் (Krakow) என்பது ஒரு ஐரோப்பிய நாட்டின் பழைய தலைநகரம். அது எந்த நாடு?

1682. நரம்புக் கோளாறுகளுக்கான காரணங்களைக் கண்டுபிடிக்க மனத்தைப் பற்றிய ஆராய்ச்சிக்கு (Psychoanalysis) வழி வகுத்தவர் யார்? எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

1683. சார்டீனியாவும் சிசிலியும் எந்த ஐரோப்பிய நாட்டைச் சேர்ந்தவை?

1684. நூற்றாண்டுப்போர் எந்த இரு நாடுகளுக்கிடையே நடந்தது? எந்த ஆண்டில் ஆரம்பமாயிற்று?

1685. ஹவாய்த் தீவுகளின் தலைநகரத்தின் பெயர் என்ன?

1686. ஆபிரகாம் லிங்கனுக்கு அமெரிக்காவில் ஒரு புகழ் மிக்க நினைவுச் சின்னம் எழுப்பியுள்ளார்கள். அது எந்த நகரில்? பெயர் என்ன?

1687. கருங்கானகம் (Black Forest) எந்த ஐரோப்பிய நாட்டில் உள்ளது?


1688. ஹங்கேரி நாட்டின் பழைய தலைநகரமும் தலைமைக் குருவின் இருப்பிடமும் எது?

1689. பண்டைய உலகின் ஏழு அதிசயங்கள் என்னென்ன என்று சொல்லத் தெரியுமா?

1690. ஸ்காண்டிநேவிய நாடுகள் என்பவை எவை?

1691. கேர்வெர்டி தீவுகள் எந்த நாட்டுக்குச் சொந்தமானவை?

1692. அர்ஜென்டினா குடியரசின் செழுமை மிக்க பரந்த விளைச்சல் பிரதேசத்துக்கு என்ன பெயர்?



1671. ஜீன் ஃபிரான்ஸ்காய்ஸ் க்ராவலட் ப்ளாண்டின். 1672. மகாபாரத யுத்தத்தில் முறையே கிருஷ்ண பரமாத்மாவும், அர்ஜுனன், பீமன், தருமபுத்திரர், நகுலன், சகதேவன் ஆகியோர் ஊதிய சங்குகளின் பெயர்கள் இவை. 1673. லாப்லாந்தியர். 1674. பெல்ஜியம், நெதர்லாந்து, லக்ஸம்பர்க் ஆகிய தேசங்களுக்கு. 1675. லிக்டென்ஸ்டைன் (Liechtenstein). 1676. மாலாவி (Malawi) 1677. மால்டா, கோஸா, கோமினோ. 1678. ஃபான் (Fohn) என்று பெயர். 1679. பாலலைகா (Balalaika) 1680. ஸ்வீடன். 1681. போலந்து. 1682. ஆஸ்திரியாவைச் சேர்ந்த விஞ்ஞானி சிக்மண்ட் ஃபிராய்ட் (Sigmund Freud) 1683. இத்தாலி நாட்டை. 1684. இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்கும். 1338ல் ஆரம்பமாயிற்று. 1685. ஹோனலுலு. 1686. வாஷிங்டனில் - லிங்கன் மெமோரியல். 1687. ஜெர்மனியில். 1688. எஸ்டர்காம் (Esztergom) 1689. (1) பாபிலோனிலிருந்த தொங்கு தோட்டம். (2) எகிப்தில் உள்ள பிரமிட்டுகள் (3) எபீஸஸில் உள்ள டயானாவின் ஆலயம். (4) பீடியாஸின் ஜூபிடர் சிலை. (5) ரோட்ஸ் நகரில் உள்ள கலாஸஸ் என்ற அரங்கம். (6) ஹாலிகார்னஸஸில் உள்ள மோஸலியம் (கல்லறைக் கட்டடம்) (7) அலெக்ஸாந்திரியாவில் இருந்த கலங்கரை விளக்கம். 1690. டென்மார்க், நார்வே, ஸ்வீடன். 1691. போர்த்துக்கீசிய நாட்டுக்கு. 1692. பாம்பாஸ் என்று பெயர்.

'கோகுல'த்தில் வெளிவரும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக

மின்சார நெருக்கடியை மிகச் சிறந்த முறையில் சமாளிக்கிறது பிலிப்ஸ்.



அரைப்பங்கு
மின்சாரச்
சிலவில்
இருபங்கு
ஒளி!

தற்கால மின்சார நெருக்கடியை எளிதில் சமாளியுங்கள். பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் பொருத்தி மின்சாரத்தை மிச்சப்படுத்துங்கள்.

ஒளித்துறையில் உன்னதமான சாதனைகள் புரியும் பிலிப்ஸ் அளிக்கும் ஸ்ட்ரிப்லைட், தரத்தோடு உழைப்பிற்கும் பெரிதும் நம்பகமானது.

இதிலுள்ள தரமான உறுப்புகள் முன்கூட்டியே ஒயர் செய்யப்பட்டவை யாதலால் இது வீடு, அலுவலகம், கடை தொழிற்கூடம், எங்கும் பொருத்த எளிதானது, உபயோகத்திற்குச் சிக்கனமானது.

சிக்கனமான மின்சாரச் சிலவில் சிறந்த ஒளி தருவது—பிலிப்ஸ்

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

PHILIPS

பிலிப்ஸ்

PHL-7147



